வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk   மலர் : 01   08.09.2021 புதன்கிழமை   இதழ் : 277   பக்கங்கள் : 16




# தமிழ் அரசு கட்சிக்குள் தனி அணி உருவானது

## மனித உரிமைகள் ஆணையருக்கு தனியாக ஆவணம் அனுப்புகிறது!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 08

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 4 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 9 கட்சி உறுப்பினர்கள் கையொப்பமிட்டு தனியான ஆவணம் ஒன்றை அனுப்பவுள்ளனர் என்று அறிய வருகின்றது.

15

## கொரோனா தொற்றால் மேலும் 184 பேர் மரணம்

கொழும்பு, செப். 08

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 184 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்

15

## நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கையில் திடீர் வீழ்ச்சி

### நேற்று 2,960 பேருக்கே தொற்று

கொழும்பு, செப். 08

இலங்கையில் நீண்ட நாட்களின் பின்னர் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று குறைவடைந்துள்ளது. நேற்று தொற்று உறுதியான 2 ஆயிரத்து 960 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

15

## சிங்களவரின் போராட்டத்தை ஒடுக்கவே அவசரகால சட்டம்

### கஜேந்திரன் பாராளுமன்றத்தில் உரை

கொழும்பு, செப். 08

அன்று தமிழரின் போராட்டங்களை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட அவசர கால சட்டத்தை இப்போது சிங்களவர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை

15

## பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்

### அழைப்பு விடுக்கின்றார் நிதி அமைச்சர் பஸில்

கொழும்பு, செப். 08

கட்டுப்படுத்த முடியாத செலவுகள், குறைந்து போன வருமானம். இதுதான் இன்று நாடு எதிர்கொள்ளும் மிகப் பெரும் நெருக்கடி. இந்த நெருக்கடியை எம்மால் தனியாக எதிர்கொள்ள முடியாது. எனவே எதிர்க்கட்சிகள் எமக்கு ஒத்துழைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்த நிதி அமைச்சர்

15

## அவசரகால சட்டத்தின் மூலம் மக்களை அடக்கவேமுடியாது

### பாராளுமன்றத்தில் தெரிவித்தார் பொன்சேகா

கொழும்பு, செப். 08

அரிசி, சீனிக்கு அவசரகால சட்டம் கொண்டுவருகின்றீர்கள் என்றால் யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று தெரியவில்லை. அவசரகால சட்டத்தின் மூலம் மக்களை அடக்க முடியாது. இப்போது மக்கள் சிறைச்சாலைகளுக்கு பயப்படுவதில்லை. அங்கு செல்வதற்கு அவர்கள் தயாராகவே இருக்கின்

15

## வட, கிழக்கில் தேங்கி கிடக்கும் சடலங்கள் மின்தகன மேடைகள் உடனடியாக தேவை

### பாராளுமன்றத்தில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 08

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொரோனா சடலங்கள் தேங்கிக் கிடக்கின்றன. எனவே உடனடியாக எரிவாயு மின்தகன மேடைகளை வடக்கு, கிழக்கில் அமைக்க நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவரத்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களை சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய எரிப்பதற்கு அவசியமான எரிவாயு மின்தகனமேடைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போதியளவு இல்லை.

15

## நிதி சட்டமூலம் 90 வாக்குகளால் நிறைவேற்றம்

கொழும்பு, செப். 08

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்வைக்கப்பட்டு விவாதத்துக்குட்படுத்தப்பட்ட நிதி சட்டமூலம் 90 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது

இந்த நிதி சட்டமூலத்துக்கு ஆதரவாக 134 வாக்குகளும் எதிராக 44 வாக்காலும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 90 மேலதிக

15

### நாட்டின் கடன்தொகையை போன்று

## மன்னார் எரிவாயு வளத்தினால் 3 மடங்கு வருமானம் பெறலாம்

### அமைச்சர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 08

மன்னார் கடற்பரப்பிலுள்ள 26 ஆயிரத்து 700 கோடி டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தினால் நாட்டின் மொத்த கடன் தொகையை போன்று மூன்று மடங்கு வருமானம் ஈட்ட முடியும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வை

15



## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஜெனிவாவிற்கு கடிதம் எழுதியவுடன் கூட்டமைப்பு உடைந்துவிட்டது என்று பலர் துள்ளிக்குதிக்கிறார்கள்.

அதிலும் சிலர், ரெலோவும் புளொட்டும் தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் குத்திவிட்டார்கள், அவர்களை கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்ற அளவிற்கு கருத்துச் சொல்லி வருகிறார்கள்.

உண்மைதான், ஒரு கூட்டு அமைப்பு என்று வந்துவிட்டால் ஒவ்வொரு விடயங்களையும் கூட்டிலுள்ள மற்றவர்களுடன் கலந்துபேசி, முடிவெடுத்துத்தான் செயல்படவேண்டும். இந்த சாதாரண விடயம் கூடத் தெரியாதவர்கள் கூட்டுச் சேரக் கூடாது.

தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ரெலோ இறங்கியபோதே ஒரு விடயத்தை கவனத்தில் எடுக்கவில்லை.

கூட்டமைப்பு என்பது தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்களின் தெரிவுக்குரிய பெரிய அமைப்பு.

இன்றும் (கடந்த தேர்தலில் சற்று பின்னடைவைச் சந்தித்திருந்தாலும்) தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக கூட்டமைப்பையே சர்வதேசம் பார்க்கின்றது.

இந்தக் கருத்தில் நமக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அப்படியிருக்க, கூட்டமைப்பும் அனந்தியின் கட்சிக்கு நிகராக ஒரு கட்சியாக போயிருந்து பேசுவதை மாவை ஜீரணித்தாலும் கட்சியிலுள்ள மற்றவர்களால் அதனை ஜீரணிக்க முடியாதுதான்.

அவையெல்லாவற்றையும் ஒருபுறத்தே வைத்துவிட்டு, இப்போது ரெலோவும் புளொட்டும் தனியாக சென்றுவிட்டது, கூட்டமைப்பு பிளவுபட்டுவிட்டது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

தமிழ் அரசை புறந்தள்ளி, அந்த பங்காளிக் கட்சிகள் தனித்து கையொப்பமிட்டது தவறு என்றால், அவர்களின் விருப்பம் இல்லாமலும், அவர்களுக்கு தெரியாமலும் தமிழ் அரசு, அரசாங்கத்துடன் பேசுவது எந்த வகையில் கூட்டணி தர்மத்தின்பாற்பட்டது? என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அரசின் பிரதிநிதிகள் கூட்டமைப்புடன் பேசுவதற்கு விரும்பினால், அவர்கள் நிச்சயம் சுமந்திரனைத்தான் அணுகுவார்கள் என்பது ஆய்வுக்குரியதல்ல. அதுவும், அமெரிக்க தூதுவரின் மத்தியஸ்தத்துடன் நடந்ததாகக் கூறப்படும் ஒரு முயற்சியை சுமந்திரனைத் தவிர அவர்கள் வேறு யாரையும் அணுகப்போவதில்லை.

அவ்வாறு அணுகுகின்றபோது அவர் பேசுவதும், அதனை இரகசியமாக வைத்திருப்பதும் இராஜதந்திர அணுகுமுறைதான். ஆனால், அதுகுறித்து பல்வேறு செய்திகள் இறக்கை கட்டி பறக்கும்போது என்ன நடந்தது, அது எதற்காக அவசியமானது என்பதை பங்காளிக்கட்சிகளுக்கு தெரிவித்திருக்க வேண்டும்.

அப்படித் தெரிவித்திருந்தால், ரெலோ, அரசாங்கத்துடன் பேசுவதற்கு எதிராக அறிக்கைகளை விட்டு மூக்குடைபட்டிருக்க வேண்டி வந்திருக்காது.

இவை முடிந்து தமிழ் அரசு கட்சியின் அரசியல் குழு அண்மையில் மெய்நிகர் வழியில் கூடியபோது, நடந்த பேச்சுக்கள் குறித்து சுமந்திரன் விளக்கிக் கூறினாரெனவும், அதனை தமிழ் அரசு ஏற்றுக்கொண்டதாகவும் செய்திகள் வந்தன. ஆனால், இன்றுவரை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு அவைகுறித்து விளக்கமளித்ததாகவோ அவர்கள் ஏற்றுக்கொண்டனரெனவோ எந்த செய்தியும் இல்லை.

அப்படியெனில் பேச்சு விடயத்தில் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் அரசு தனி ஆவர்த்தனம் செய்வது சரியானது என்றால், புளொட்டும் ரெலோவும் மற்றவர்களுடன் சேர்ந்து கடிதம் அனுப்பியதையும் பிழையான அணுகுமுறை என்று எவரும் கைநீட்ட முடியாது.

கூட்டமைப்பு எப்போது உடையும், அதிலிருந்து பங்காளிக்கட்சிகள் வெளியேறினால் நாங்களும் தமிழ் அரசில் தலைநிமிர்ந்து விடலாம் என்று நினைப்பவர்களுக்கு வேண்டுமானால் உடைவு அவசியம்தான். ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஒன்றே அவசியமானதும் அவசரமானதும் என்று நினைக்கின்றவர்களுக்கு அது மகிழ்ச்சி தருகின்ற செய்தி அல்ல.

- ஊர்க்குருவி

# கோட்டா அடிப்படையில் அமைச்சர்களுக்கு தடுப்பூசி

## பாராளுமன்றில் அநுரகுமார



கொழும்பு, செப். 08

அமைச்சர்களுக்கு கோட்டா அடிப்படையில் தடுப்பூசிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்று பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க.

தடுப்பூசி அரசியல் மயப்பட்டது எவ்வாறு? சில அமைச்சர்களிற்கு கோட்டா வழங்கப்பட்டது. உலகில் எங்கு இப்படி நடந்தது. அமைச்சர் ரமேஷ் பத்திரண சொல்லுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த ரமேஷ் பத்திரண- "எந்த அரசியல் வாதிக்கும் தடுப்பூசி கோட்டா வழங்கப்படவில்லையென்பதை பொறுப்புடன் சொல்கிறேன்" என்றார்.

அநுர உரையை தொடர்ந்த போது, "சரி. ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு 3,000 தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. பந்துல குணவர்த்தனவிற்கு வழங்கப்பட்டது. இதை பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி சொல்லவில்லை. பகிரங்க ஊடக சந்திப்பிலும் சொல்லியுள்ளேன். முடியுமானால் வழக்கு தாக்கல் செய்யுங்கள். நீதிமன்றத்தில் சந்திக்க விரும்புகிறேன்" என்றார். (ஐ)

## கிளிநொச்சியில் மின்தகன மயானம்

கிளிநொச்சி, செப். 08

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்தகன மயானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

இந்த மின் மயானத்தை அமைக்க 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தொகையில் ஒரு கோடி ரூபாயை கிளிநொச்சியில் உள்ள வர்த்தகர் ஒருவர் வழங்க முன் வந்துள்ளார்.

இதேபோல புலம்பெயர் அமைப்பு ஒன்றும் ஒரு கோடி ரூபாயை வழங்க முன்வந்துள்ளது. மின்தகன மயானம் அமைக்கும் நடவடிக்கை தொடர்பிலான செயல்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆயிரத்து 769 பேர் பூரண குணம்!

கொழும்பு, செப். 08

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் ஆயிரத்து 769 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று செவ்வாய்க்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனரென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை 3 இலட்சத்து 88 ஆயிரத்து 278 பேர் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 65 ஆயிரத்து 949 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் 10 ஆயிரத்து 320 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கல்வி TV CHANNEL-1
**08.09.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | அனைத்துப்பாடங்களும் புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி TV CHANNEL - 2
**08.09.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
08.09.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# இந்த தந்திரம் வெற்றியளிக்குமா?

மத்திய வங்கியின் புதிய ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்படவுள்ளாரென்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த செய்தியை கப்ரால் மறுக்கவில்லை. தற்போது மத்திய வங்கியின் ஆளுநராக இருக்கின்ற, பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் சர்வதேச நாணய நிதியத்தில் பதவி ஒன்றை பெறவுள்ள நிலையிலேயே, கப்ரால் மீண்டும் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படவுள்ளாரெனக் கூறப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், கப்ராலே மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகித்திருந்தார். கப்ரால் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு நெருக்கமானவராவார். இவரின் புதிய நியமனம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் கிடைக்கும் தவல்களின் அடிப்படையிலேயே ஈழநாடு இந்த விடயத்தை ஆராய முற்படுகின்றது.

நாடு பொருளதார ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துவரும் நிலையில் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. இதன் முதல் கட்டமாக பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராகப் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து, கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். இன்னும் சில அமைச்சுப் பொறுப்புக்களும் மாற்றப்பட்டிருந்தன. எனினும், அவைகள் அரசியல் ரீதியில் முக்கியமானவைகள் அல்ல. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மத்திய வங்கியின் ஆளுநர் பதவியிலும் மாற்றம் ஏற்படவுள்ளது. இந்த விடயங்களை தொகுத்து நோக்கினால் ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது குறித்த பொறுப்புக்களை வகித்தவர்கள் அனைவரும், தற்போது அதே பொறுப்புக்களுக்கு நியமிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்தமையைத் தொடர்ந்து, அவரின் நேரடி ஆலோசனையின் பெயரிலேயே அனைத்து நியமனங்களும் இடம்பெற்றிருந்தன. அவரை ஜனாதிபதியாக்குவதில் முக்கிய பங்கு வகித்த அமைப்பான வியத்மக அமைப்பினரே அனைத்தையும் தீர்மானிக்கின்றனர் எனவும் அப்போது கூறப்பட்டது. ஆனால், அவரால் நியமிக்கப்பட்ட முக்கிய நியமனங்கள் அனைத்துமே தற்போது மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. இந்த மாற்றங்கள் எதனை உணர்த்துகின்றன? ஜனாதிபதியின் அணுகுமுறைகளால் எதிர்பார்த்த அறுவடையை பெற முடியவில்லை என்பதையா? அல்லது அவரின் ஆலோசனையின் பெயரில் இடம்பெற்ற நியமனங்களால், எதிர்பார்த்த பெறுபேறுகள் இடம்பெறவில்லை என்பதையா?

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் விடயங்கள் வெற்றிகரமாகக் கையாளப்பட்டன எனக் கூறமுடியாது. சீனாவிடமிருந்து கடன்களை அதிகளவில் பெற்று சில விடயங்களைச் செய்ய முற்பட்ட போதிலும்கூட, அது பெரியவில் வெற்றியளிக்கவில்லை. அதேவேளை மேற்குலக நாடுகளின் அழுத்தங்களும் அதிகரித்துக் கொண்டு சென்றன. இதனை மஹிந்த ராஜபக்ஷ அணியினரால் வெற்றிகரமாக கையாள முடியவில்லை. நாடு மேலும் சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கிக்கொண்டு சென்ற சந்தர்ப்பத்தில்தான், ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டது. ஆனாலும் புதிய அரசாங்கத்தினாலும் விடயங்களை சமாளிக்க முடியில்லை. இந்த நிலையில்தான் சீனாவின் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாதநிலையில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், இப்போதுள்ள நிலைமை முற்றிலும் வேறானது. இன்னும் சிக்கலானது.

கொரோனாவிற்கு பின்னர் நாடு வரலாறு காணாத வகையில் பொருளாதார நெருக்கடிகளில் சிக்குண்டிருக்கின்றது. இந்த நிலைமையை வெறும் கதிரைகளில் அமர்பவர்களை மாற்றுவதால் மட்டும் மாற்றயமைத்து விட முடியாது. எனினும், அரசாங்கம் ஏதோவொரு நம்பிக்கையில், ஓர் ஆட்டத்தை ஆடிப்பார்க்க எத்தனிக்கின்றது. நிலைமைகள் மோசமாக இருக்கின்ற நிலையில் எதையாவது செய்து, இந்த நெருக்கடியைச் சரி செய்யலாமா என்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. அரசாங்கத்தின் இந்தத் தந்திரங்கள் வெற்றியளிக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ‘யார் குத்தியும் அரிசி ஆகட்டும்’

- அலசுவது இராஜதந்திரி -



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டுக்கு இலங்கையின் பொறுப்புக்கூறலையும், நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி கடிதமொன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை வலியுறுத்தி வடக்கு - கிழக்கின் அனைத்துத் தமிழ் அரசியல் தரப்பினரும் ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வரத் தவறியிருந்தனர். இது விடயத்தில் ஓர் இழுபறி நிலை காணப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் கையொப்பத்துடன் ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம், சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருக்குமென்றே கருத முடியும்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கில் அரசு சார்பற்ற சகல தமிழ் அரசியல் கட்சிகளினதும் அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளது ஓர் அரசியல் பிரிவு என்ற எண்ணக்கருவுடனேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளால் அரசியல் ரீதியாகப் பலமடைய முடியாதுபோனதுடன் இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டிருந்தனர்.

எனவே, சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கின் முக்கிய அரசியல் சக்தியாகதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குவதாகவே இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலை வடக்கு - கிழக்கு அரசியல் தரப்பை மேலும், பலவீனப்படுத்துவதாகவே இருக்கும்.

இந்தத் தடவை ஜெனிவாவைப் பொறுத்தவரை ஆணித்தரமான முடிவுகளை எட்ட வேண்டியது அவசியமானதாகின்றது. ஏனெனில், அரச தரப்பு ஜெனிவா தீர்மானங்களில் அனேகமானவை நிறைவேற்றப்பட்டுவிட்டன என்ற தனது தரப்பு நிலைப்பாட்டை வலியுறுத்துவதில் முனைப்பாகவே இருக்கின்றது. ஆனால், வடக்கு - கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பரிதவித்து நிற்கின்றன. இது விடயத்தில் அரச தரப்பு பொறுப்புக்கூறலிலிருந்து விலகிவிட முடியாது. அத்துடன், நீதி விசாரணைகளின்றி சிறைகளில் பல வருடகாலமாக இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இந்த விடயங்களே முக்கிய மனிதாபிமானப் பிரச்னைகளாகக் காணப்படுகின்றன. இவைதவிர, யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் நில அபகரிப்புகள் மற்றும் ஆயுதப்படை முகாம்கள் வடக்கு - கிழக்கில் அகற்றப்படாதுள்ளமை ஒரு முழுமையான நல்லிணத்துக்கு குறுக்கீடுகளாக இருக்கின்றன. எனவே, ஜனாதிபதி கோட்டாபய அரசு ஜெனிவா விவகாரத்தை ஏற்கனவே நிராகரித்துள்ளதுடன் வடக்கு - கிழக்கு மக்களின் நியாயமான மனிதாபிமானப் பிரச்னைகளை நகைப்புக்குரியதாக்கும் விதத்தில் நடந்து கொள்கின்றது.

இந்தத் தருணத்திலேயே வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பு மிக விழிப்புடனும் புத்திசாலித்தனத்துடனும் நடந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகின்றது. ஏனெனில், தற்போதைய சூழ்நிலையில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையே வடக்கு - கிழக்கு தமிழர்களின் மனிதாபிமானப் பிரச்னைகளுக்கான பொறுப்புக்கூறலை வேண்டி நிற்பதற்கும் நல்லிணக்கத்தை வலியுறுத்துவதற்குமான அரங்காகவும் விளங்கி நிற்கின்றது.

**ஆட்டம் கண்டுள்ள அரசு**

இன்றைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை தென்னிலங்கையில் அதன் செல்வாக்கு வெகுவாக ஆட்டம் கண்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதில் முனைப்பாக நின்ற முக்கிய பௌத்த மதகுருமர்கள் உட்பட அரசாங்கத்திலுள்ள பங்காளிக்கட்சியைச்சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் தற்போதைய ஆட்சி குறித்து பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

தென்னிலங்கையில் உள்ள குழப்பகரமான அரசியல் நிலவரம் குறித்து சர்வதேச சமூகமும் நன்கறிந்தே வைத்துள்ளது. அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய அரசின் சீன சார்பு நிலைப்பாடு குறித்தும் மேற்கத்தேய நாடுகள் அதிருப்தி கொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு அரசியல் தரப்பு தனது அரசியல் நகர்வுகளை குழப்பகரமான நிலைமைகளை தவிர்த்து மேற்கொள்ளுமேயானால் நல்ல முடிவுகளை எட்ட முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தனித்துவத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கலாம். அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முரண்படுகின்ற ஏனைய வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் கட்சிகளும் தமது கருத்துக்களை முன்னிறுத்தி ஜெனிவாவுக்கு கடிதங்களையோ அல்லது அறிக்கைகளையோ சமர்ப்பிக்கலாம். ஆனால், வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை “யார் குத்தியும் அரிசியாக வேண்டியதே“ இன்றியமையாததாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நேர்மையான அணுகுமுறை காரணமாக பிரச்னையில் இருந்து மீளுவீர்கள். தெய்வீக சிந்தனை மேலோங்குவதால் நிம்மதி கூடும். தேவைகளை அடைவதற்கு அதிக பணம் செலவழிப்பீர்கள்.

**இடபம்**
செலவு அதிகமானாலும் மகிழ்ச்சி ஏற்படும். உங்களிடம் வாக்குவாதம் செய்பவர்களிடம் பக்குவமாகப் பேசுங்கள். பொதுமக்கள் தொடர்பின் மூலம் விரும்பிய ஆதாயம் கிடைக்கும்.

**மிதுனம்**
மனதின் மகிழ்ச்சி காரணமாக மன்னிக்கும் குணம் வரும். குழந்தைகளுக்கு குடும்பச் சுமை கூடும். உபரி வருமானம் வரும். சக பணியாளரிடையே நல்ல நட்புணர்வு காணப்படும்.

**கடகம்**
எதிலும் கவனமாகச் செயல்பட வேண்டிய நாள். நன்றி மறந்த சொந்த பந்தங்களை நினைத்து வருந்தாதீர்கள். ஆடம்பர செலவுகளால் சிறிதளவு பண நெருக்கடி உண்டாகும்.

**சிம்மம்**
உங்கள் கருத்திற்கு இருந்து வந்த எதிர்க்கருத்துகள் மாறும். சிறப்பாக செயல்பட்டு வாழ்க்கைத் துணையின் பாராட்டை பெறுவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள். குடும்ப வருமானம் உயரும்.

**கன்னி**
நீண்ட நாள் விருப்பம் ஒன்று திடீரென்று நிறைவேறும். தொல்லைகள் குறைய ஆரம்பிக்கும். கவலையை மறப்பீர்கள். திட்டமிட்டுப் பணியாற்றுவதன் மூலம் தவறுகளை தவிர்ப்பீர்கள்.

**துலாம்**
நீண்ட நாள் கனவு ஒன்று நனவாகத் துவங்கும். மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறும் சாதனைகளை செய்வீர்கள். பிரியமானவர்களுடனான அன்பை வலுப்படுத்துவீர்கள்.

**விருட்சிகம்**
சந்தோஷச் செய்தி வரும். மனம் சமநிலையில் இருக்கும். புதிய வாகனம், வீடு வாங்கும் முயற்சியில் முன்னேற்றம் உண்டு. சிறிய வெற்றி ஒன்றின் மூலம் மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு**
எதிர்பார்த்த தகவல் ஒன்று தாமதத்துக்குப் பிறகே வந்து சேரும். எதிரிகள் யாரென்று அறிந்து அவர்களை வெல்வீர்கள். மனதில் உற்சாகமான போக்கு நிலவும். செயலில் கவனம் தேவை.

**மகரம்**
குழந்தைகளின் செல்வாக்கு உயர்வதால் பெருமிதம் ஏற்படும். வருமானத்தின் பொருட்டு குறுக்கு வழியை நாட வேண்டாம். பயணத்தின்போது பண இழப்பு ஏற்படாமல் கவனம் தேவை.

**கும்பம்**
எந்த விஷயத்தையும் பதற்றமின்றி எதிர்கொள்ளுங்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம். கடமையை நிறைவேற்றுவதில் இருந்த தொய்வு அகலும்.

**மீனம்**
நிதிநிலை நிம்மதி தரும். செயல்களில் அக்கறையை கூட்டுங்கள். வாழ்க்கைத் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். வியாபாரிகள் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

# விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்துக்கு அனுமதி வழங்க கோரி போராட்டம்!

## சென்னையில் இந்து முன்னணி நடத்தியது




*சென்னை, செப். 08*

விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்துக்கு அனுமதி வழங்க கோரி சென்னையில் நேற்று இந்து முன்னணியினர் சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. அனுமதி வழங்காவிட்டால் தடையை மீறி விநாயகர் சதுர்த்தி நடைபெறும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாமுழுவதும்கொரோனா தொற்று அதிகரித்து வருவதை தொடர்ந்து மத நிகழ்ச்சிகளுக்கு தடை விதிக்க மத்திய அரசு, மாநில அரசு களுக்கு அறிவுறுத்தி உள்ளது. அதன் அடிப்படையில் தமிழ கத்தில் முக்கிய மத நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்துக்கும் தமிழக அரசு தடை விதித்து உள்ளது. இந்த நிலையில் தமிழகம் முழுவதும் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்துக்கு அனுமதி வழங்க வேண்டும் என இந்து முன்னணியினர் சார்பில் நேற்று சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகே உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

உண்ணாவிரதத்துக்கு மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். அந்த அமைப்பின் பொது செயலாளர் பக்தவச்சலம், சென்னை மாநகர தலைவர் இளங்கோவன் உள்ளிட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

“புதுச்சேரி, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்துக்கு அந்த மாநில அரசுகள் அனுமதி வழங்கியுள்ளன. எனவே தமிழக அரசு உடனடியாகவிநாயகர்சதுர்த்தி கொண்டாட்டத்துக்கு போட்டுள்ள தடையை விலக்கி, அனுமதி அளிக்க வேண்டும். அவ்வாறு தடையை விலக்கவில்லை என்றால் தமிழகம் முழுவதும் தடையை மீறி விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டம் நடைபெறும்” என அவர்கள் தெரிவித்தனர்.

# ஒரு கோடி தடுப்பூசி கூடுதலாக தேவை; மத்திய அரசிடம் தமிழகம் கோரிக்கை!

*சென்னை, செப். 08*

தமிழகத்திற்கு கூடுதலாக ஒரு கோடி தடுப்பூசிகள் வழங்கக் கோரி தமிழக மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பி உள்ளார்.

தமிழகத்தில் தடுப்பூசி போடும்பணியை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. குறிப்பாக தமிழகத்தில் இதுவரை 3.59 கோடி தடுப்பூசி போடப்பட்டுள்ளது. முதல் தவணை தடுப்பூசி 44 சதவீதமும், இரண்டாம் தவணைத் தொகை 15 சதவீதம் பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்த சூழலில் தமிழகத்தில் வரும் செப்டம்பர் 12 ஆம் தேதி ஒரே நாளில் 10,000 தடுப்பூசி முகாம்கள் மூலம் 20 இலட்சம் தடுப்பூசிகள் போட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு 1 கோடி கொரோனா தடுப்பூசிகள் தேவையாக உள்ளது.



இந்நிலையில், சிறப்பு முகாம் நடத்த இருப்பதால் கூடுதலாக ஒரு கோடி கொரோனா தடுப்பூசி தேவை என்று கூறி, மத்திய சுகாதாரத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியாவுக்கு, அமைச்சர் மா. சுப்பிரமணியன் கடிதம் எழுதியுள்ளார்.

# கொடநாடு கொலை, கொள்ளை வழக்கை தடை செய்யக் கோரும் மனு தள்ளுபடி

*சென்னை, செப். 08*

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் மேல் விசாரணைக்கு தடை விதிக்கக் கோரி அனுபவ் ரவி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இது தொடர்பான மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், “கொடநாடு வழக்கு முக்கியத்துவம் வாய்ந்தது போல தோன்றுகிறது. அந்த வழக்கில் மேல் விசாரணை தேவை என புலனாய்வுத் துறை கோரும்பட்சத்தில் அதில் மனுதாரருக்கு என்ன பிரச்னை?” என்று கேள்வி எழுப்பியது.




இந்த விவகாரத்தில் புலனாய்வு அமைப்பின் விசாரணையில் தற்போதைக்கு தலையிட விரும்பவில்லை என்று கூறிய நீதிபதிகள், அனுபவ் ரவியின் மனுவையும் தள்ளுபடி செய்தனர்.

கொடநாடு கொலை மற்றும் கொள்ளை வழக்கில் ஏற்கெனவே பல்வேறு சாட்சிகளிடம் விசாரித்து வழக்கு முடிக்கப்படும் தருவாயில் அதை மீண்டும் விசாரிக்க காவல்துறை விடுக்கும் கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று அதிமுக பிரமுகர் அனுபவ் ரவி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொரடர்ந்திருந்தார். ஆனால், அதை உயர் நீதிமன்றம் ஏற்கவில்லை

இதையடுத்து உச்ச நீதிமன்றத்தில் அனுபவ் ரவி தரப்பில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதுவும் தற்போது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஈழநாடு



# ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 08

2020 மற்றும் 2021 ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டு பரீட்சை, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா தொற்று நிலையை கருத்தில்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ.பூஜித் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டு பரீட்சையை எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படை பஸ்ஸுடன் விபத்து; வவுனியாவில் இளைஞன் மரணம்

வவுனியா, செப். 08

வவுனியாவில் கடற்படை பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞன் ஒருவர் பலியானார்.

நேற்று முன் தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து ஈரப்பெரியகுளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், ஈரப்பெரியகுளம் சந்திக்கருகில் மதவாச்சியில் இருந்து வவுனியா நோக்கி வந்த கடற்படை பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஈரப்பெரிய குளம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய மோட்டார் சைக்கிளை செலுத்திய சாரதி அனுஸ்க அபயரத்தின லக்மால் என்ற இளைஞன் சம்பவ இடத்தில் பலியானார்.

சடலம் வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈரப்பெரியகுளம் பொலிஸ் பொறுப்பதிகாரி சுகத்தன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசியின் 'பூஸ்டர் டோஸ்'!

கொழும்பு, செப். 08

60 வயதிற்கு மேற்பட்ட தடுப்பூசி நபர்களுக்கு 3ஆவது அலகு (Booster Shot) வழங்குவது குறித்து விரிவான ஆய்வுக்குப் பிறகு முடிவு எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது அலகை வழங்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பல நாடுகளில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# கொரோனா கட்டுப்பாட்டு குழுவிலிருந்து மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம விலகல்

கொழும்பு, செப். 08

கொரோனா கட்டுப்பாடு தொடர்பான மருத்துவக் குழுவிலிருந்து மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம விலகியுள்ளார்.

இது குறித்து அவர் சுகாதார சேவைகள் இயக்குனர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்தவதற்காக எடுக்கப்பட்ட சில முடிவுகளுடன் உடன்பட முடியாது என்று கூறி அவர் இராஜினாமா செய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

தொழில்நுட்பக் குழுவின் அறிவுறுத்தலின்படி நாட்டை மூடுதல் மற்றும் தடுப்பூசி செயல்முறை மேற்கொள்ளப்படவில்லை என்றும் மற்ற காரணங்களால் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் எதிர்காலப் பேரழிவுகளுக்கு அவர் பொறுப்பேற்க முடியாது என்றும் குறிப்பிட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

# எந்த தடுப்பூசி விரைவாக கிடைக்கிறதோ உடனே அதனை பெற்றுக் கொள்ளுங்கள்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் அறிவுரை



யாழ்ப்பாணம், செப்.08

**எந்த தடுப்பூசி விரைவாக கிடைக்கிறதோ அதனை பெற்றுக் கொள்ளுங்கள் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

சினோபார்ம் தடுப்பூசி தொடர்பில் பொதுமக்களிடையே காணப்படும் ஐயப்பாடு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில்ஐந்து வகையான தடுப்பூசிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இன்றுவரை நாட்டில் 10 மில்லியன் மக்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி தான் வழங்கப்பட்டுள்ளது.

எனவே தடுப்பூசிகளை எடுத்துக்கொண்டால் தடுப்பூசிகளிடையே வேறுபாடுகள் காணப்படாது.

ஆனால், நாங்கள் இந்த தடுப்பூசிதான் போடுவோம் என பார்த்துக் கொண்டிருக்காது எந்தத் தடுப்பூசி எமக்கு விரைவாக கிடைக்கின்றதோ அந்த தடுப்பூசியை நாங்கள் பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.

சினோபார்ம் தடுப்பூசி பற்றி பொதுமக்கள் மத்தியில் ஒரு சந்தேகம் ஓர் ஐயப்பாடு நிலவுகின்றது. இது சீனத் தயாரிப்பு. எந்த ளவுக்கு இது நோயை குறைக்கும் என்ற ஐயம் காணப்படுகின்றது.

இது சீனாவில் மட்டுமல்லாது பல நாடுகளில் இந்த ஊசி பயன்படுத்தப்படுகின்றது. அதாவது பல நாடுகளில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டதன் மூலம் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே, இந்த தடுப்பூசி தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. எனவே இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் சினோபார்ம் தடுப்பூசி மூலம் இறப்புகளையும் நோய் தாக்கத்தினையும் குறைக்க முடியும் என்பது ஆய்வுகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார்.

# "தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும் அலட்சியமாக செயல்படாதீர்கள்!"

கொழும்பு, செப். 08

தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும் அலட்சியமாக செயல்படாதீர்கள் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தற்போதைய வடக்கு மாகாண கொரோனா நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

வடக்கு மாகாணத்தில் தற்போது கோவிட் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி வழங்கும் பணிகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. அந்த அடிப்படையிலே 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தை பொறுத்தவரை 30 வயதுக்கு மேற்பட்ட 6 லட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் வடக்கு மாகாணத்தில் இருக்கிறார்கள். அவர்களில் முதலாவது டோஸ் தடுப்பூசி 5 லட்சத்து 58 ஆயிரத்து 131 பேருக்கு நேற்று வரை வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 30 க்கும் மேற்பட்டோரின் சனத்தொகையில் 85 சதவீத மானோருக்கு முதல் கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல இன்று வரை இரண்டாவது கட்ட தடுப்பூசி இரண்டு இலட்சத்து 94 ஆயிரத்து 69 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் சனத்தொகையில் 45 வீதமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இரண்டாவது கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் முதல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் இரண்டாவது கட்டத் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டாவது தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். யாழ். மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் இன்னும் 50 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி வழங்கப்படவேண்டும். அதில் கிட்டத்தட்ட 28 ஆயிரம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டோர்.

அண்மையில் 60 வயதுக்கு மேற்பட்டோரின் இறப்பு வீதமானது அதிகரித்துச் செல்கின்றது. பெரும்பாலான இறப்புகள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்பே அதிகமாக காணப்படுகின்றது.

அதிலும் தடுப்பூசி எதுவும் பெறாதவர்களே அதிகளவில் இறப்புகளை சந்திக்க நேரிடுகின்றது. அதன் காரணமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

அதன் மூலம் 60 வயதுக்கு மேற்பட்டோரின் இறப்புகளை குறைத்துக் கொள்ள முடியும். இவை யாவும் நிறைவு செய்து அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தடுப்பூசி வழங்கும் செயல்பாடு நிறைவடைந்த பின்னர் 20வயதுக்கும் 30 க்கும் இடைப்பட்டோருக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள் ளோம்.

இந்த பெருந் தொற்று காலப் பகுதியிலே இறப்புகளைத் தடுப்பதே எமது நோக்கமாக காணப்படுகின்றது. இறப்புகளைத் தவிர்க்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் கட்டாயமாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவேண்டும்-என்றார்.

# இராஜாங்க அமைச்சர் பதவிலியிருந்து விலகுகின்றார் அஜித் நிவாட் கப்ரால்?

கொழும்பு, செப். 08

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் அமைச்சுப் பதவியில் இருந்து விலகவுள்ளதுடன், பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

மத்திய வங்கியின் ஆளுநராக அவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகவும் அதற்காகவே அவர் அமைச்சர் மற்றும் எம்.பி. பதவிகளில் இருந்து விலகவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, தற்போது மத்திய வங்கியின் ஆளுநராக இருக்கும் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மன் சர்வதேச நாணய நிதியத்தின் உயர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# தென்மராட்சியில் 27 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம், செப். 08

தென்மராட்சி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று காலை மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

114 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களை மருத்துவ நடவடிக்கைக்கும் தொடர்பிலிருந்தவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் 24 மணி நேரத்தில் 3 பேர் மரணம்; 206 பேருக்கு தொற்று!!

மட்டக்களப்பு, செப். 08

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 206 கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.அத்துடன் 03 மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாளொன்றுக்கு 300 என்ற கணக்கில் அடையாளப்படுத்தப்பட்டுவந்த கொரேனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஊரடங்கு காரணமாக 200 என்ற கணக்கில் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதம் 7,959பேர் கொரனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட அதேநேரம் கடந்த வாரம் 1414 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் 34 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 248பேர் கொரோனா தொற்றினால் மரண மடைந்துள்ளதுடன் மட்டக் களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகூடிய 55கொரோனா தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 30வயதுக்கு மேற்பட்ட 278,000 பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டதை தொடர்ந்து 95 வீதமானவர்களுக்கு முதல் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 219,000 பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவரை யும் அருகில் உள்ள தடுப்பூசி மையங்களுக்கு சென்று தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார்.

# வடக்கில் கடந்த 6 நாள்களில் 75 பேர் கோவிட்-19 தொற்றால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், செப்.08

**வடக்கு மாகாணத்தில் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 6 நாள்களில் 75 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர்.**

அவர்களில் வவுனியா மாவட்டத்தில் 29 பேரும் யாழ்.மாவட்டத்தில் 27 பேரும் கடந்த 6 நாள்களில் உயிரிழந்தனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (செப். 6) 11 பேர் கோவிட்- 19 நோயினால் உயிரிழந்தனர்.

யாழ். மாவட்டத்தில் 5 பேரும் வவுனியா மாவட்டத்தில் 3 பேரும் முல்லைத்தீவில் 2 பேரும் கிளிநொச்சியில் ஒருவரும் என 11 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

இதன்மூலம் 2020 மார்ச் தொடக்கம் நேற்று முன்தினம் வரை வடக்கு மாகாணத்தில் 488 பேர் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்தனர்.

# கொழும்பிலுள்ள சிறைகளை இடம் மாற்றி முதலீட்டு திட்டங்களுக்கு நிலம் பெற முடிவு

கொழும்பு, செப். 08

வெலிக்கடை சிறைச்சாலை கட்டடத் தொகுதியை ஹொரண மில்லேவ பிரதேசத்துக்கு இடமாற்றும்போது பெண் கைதிகளுடன் உள்ள குழந்தைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தினார்.

வெலிக்கடை சிறைச்சாலை கட்டடத்தொகுதியை ஹொரண மில்லேவ பிரதேசத்திலுள்ள 200 ஏக்கர் நிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக 'சூம்' தொழில்நுட்பம் ஊடாக இடம் பெற்ற கலந்துரையாடலில் அலரி மாளிகையில் இருந்து கலந்து கொண்டிருந்தபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

30 பில்லியன் ரூபாய் செலவிலான இத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் இதன்போது பிரதமருக்கு நம்பிக்கை தெரிவித்தனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமைக்கு மத்தியில் திறைசேரியிலிருந்து இந்தத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படாதமையினால், அரசுக்கு சுமையாக அன்றி மாற்று வழிகளின் ஊடாக இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவ இதன் போது பிரதமருக்கு தெளிவு படுத்தினார்.

பொரளையிலுள்ள வெலிக்கடை சிறைச்சாலை 40 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டதாகும். அங்குள்ள செபர்ல் வார்ட் மற்றும் சிறைச்சாலை தலைமையக கட்டடம் என்பவற்றை ஹோட்டல் திட்டமொன்றுக்காக ஒதுக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

மேலும் வேறு முதலீடுகளுக்காக அதன் 35 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்படவுள்ளது. அங்கு முன்னெடுக்கப்படவுள்ள திட்டத்துக்கு பல முதலீட்டாளர்கள் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதுவரை விருப்பம் தெரிவித்துள்ள முதலீட்டாளர்களுக்கு மேலதிகமாக மேலும் முதலீட்டாளர்கள் இருப்பின் அவர்களையும் இதில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

திட்டம் செயற்படுத்தப் படும் ஹொரண மில்லேவ பிரதேசத்திலுள்ள நிலப்பரப்பு பெருந்தோட்ட நிறுவனமொன்றுக்கு சொந்தமான இறப்பர் உற்பத்தி செய்யப்பட்ட நிலமாகும். அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 123 ஊழியர்களுக்கு இழப்பீடு செலுத்தப்படும்.அவர்கள் வசித்த 57 தோட்ட குடியிருப்புகளுக்கு பதிலாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 57 புதிய வீடுகள் அமைத்து கொடுக்கப்படும்.

முதலில் மகசின் சிறைச்சாலையும் ஏனைய சிறைச்சாலைகள் அதனை தொடர்ந்தும் மில்லேவ பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவதுடன், வெலிக்கடை தூக்கு மேடையும் ஹொரண பிர தேசத்திற்கு எடுத்துச் செல்லப் படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

# கர்ப்பவதி தாய்மார் அவதானம் வேண்டும்

கொழும்பு, செப். 08

கர்ப்பவதி தாய்மார்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகின்றமை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால் கர்ப்பவதி தாய்மார்கள் உடனடியாக கொரோனா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என குடும்பநல சுகாதார பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா கூறியுள்ளார்.

கர்ப்பவதித் தாயொருவருக்கு எப்படியாவது கொரோனா தொற்று ஏற்படுமாயின், சாதாரண நபரொருவர் தொற்றுக்குள்ளாவது போலன்றி அதிக சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டார்.

# தென்மாகாணத்தில் நேற்று நில அதிர்வு

கொழும்பு, செப். 08

லுணுகம்வெஹெர பகுதியில் சிறிய அளவிலான நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக புவிச் சரிதவியல் நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 10.38 மணியளவில் இடம்பெற்ற இந்த நில அதிர்வு ரிச்டர் அளவில் 2.4 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நில அதிர்வு ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் தென்னிலங்கையின் பல இடங்களில் நில அதிர்வுகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கு இனி 40 ரூபாய் வரி அறவீடு

கொழும்பு, செப். 08

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கு 40 ரூபாய் இறக்குமதி வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரிய வெங்காயத்துக்கான தேசிய தேவை 2 இலட்சத்து 90 மெற்றிக் தொன்னாக காணப்படும் நிலையில் தற்போது விவசாயிகளும் பெரிய வெங்காயத்தை அறுவடை செய்வதனால் 2 மாதங்களில் 60 ஆயிரம் மெற்றிக் தொன் பெரிய வெங்காயம் சந்தைக்கு விநியோகிக்கப்படும்.

தற்போது அதை இறக்குமதி செய்தால் உள்நாட்டு விவசாயிகளுக்கு பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதன் காரணமாக குறித்த விடயம் நிதியமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு, 40 ரூபாய் இறக்குமதி வரி விதிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

உள்நாட்டு விவசாயிகளை பலப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் இரு மாதங்களுக்கு பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுப்பட்டுள்ள விவசாயிகளுக்கு எவ்வித பிரச்னையும் ஏற்படாது.

அவர்களின் உற்பத்திக்கு சிறந்த விலை கிடைக்கும்-என்றார்.

# 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளை பதுக்கிய களஞ்சியசாலைகளுக்கு 'சீல்'

திருமலை, செப். 08

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 45 ஆயிரம் தொன் நெல் மூடைகளை பதுக்கி வைத்திருந்த களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளால் நேற்று கந்தளாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மூன்று நெல் களஞ்சியசாலைகளில் 45 ஆயிரம் தொன் நெல்மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில், மூன்று நெல் களஞ்சியசாலைகளுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் கே.டி வசந்தன் தெரிவித்தார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸாரும் ஈடுபட்டதோடு, பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# தடுப்பூசி செலுத்தவந்த மக்கள் மீதான தடியடி தாக்குதல் குறித்து விசாரணை

கொழும்புஜ், செப். 08

வெலிகம பிரதேசத்தில் கொரோனா தடுப்பூசியை பெறச் சென்றவர்கள் மீது பொலிஸ் பரிசோதகர் தாக்கிய சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக என்று அரசாங்கம் தெரிவித் துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனை தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளாரென அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த முதலாம் திகதி மாத்தறை வெலிகமவில் குறித்த நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட தடுப்பூசிகள் காலாவதியாகியமை காரணமாக தடுப்பூசி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும், மக்கள் தொடர்ந்து அங்கு தங்கியதால் பொலிஸார் அவர்களை வெளியேறுமாறு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற வெலிகம பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிற அதிகாரிகள் மக்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தனர். இதன்போது சிலர் மீது தடியடியும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் தடுப்பூசி முழுமையாக செலுத்தாதவர்களே அதிகமாக மரணம்!

## சுகாதார வைத்திய அதிகாரி தகவல்



**கிளிநொச்சி, செப். 08**

**கிளிநொச்சி மாவட்டத்தில் கோவிட் தொற்றினால் உயிரிழந்த 44 பேரில் 90 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களும், ஒரு தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுமாவர் என்பதால் தடுப்பூசிகளை முன் வந்து பெற்றுக்கொள்ளுங்கள் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,-

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்றுவரை(நேற்று) 5,877 பேர் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 44 பேர் இதுவரை தொற்றினால் உயிரிழந்துள்ளார்கள். இறந்தவர்களில் 90 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களும், ஒரு தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுமாக உள்ளனர்.

கடந்த 2 வாரங்களாக தொற்றாளர் எண்ணிக்கை மாவட்டத்தில் அதிகமாக காணப்பட்டது. தினமும் 500 தொடக்கம் 600 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசோதனை நடந்தது. இதில் 250 பேர்வரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டார்கள். இந்த வாரம் தொற்று எண்ணிக்கை படிப்படியாக குறைய ஆரம்பித்துள்ளது.

சென்ற வாரம் தொற்றாளர் எண்ணிக்கை 150க்கு கீழாக காணப்பட்டது. இந்தவாரம் தொற்று மேலும் குறையும் என எதிர்பார்க்கின்றோம். மக்களின் ஒத்துழைப்பே பிரச்னையாக உள்ளது. நாடு முடக்கப்பட்டிருந்தாலும், மக்களுக்கு வெளியே செல்வதற்கு சில அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனை மக்கள் துஷ்பிரயோகம் செய்வதாக உணர முடிகின்றது.

வழங்கப்படும் அனுமதியை பயன்படுத்தி தேவையற்று நடமாடுகின்றனர். மாஸ்க் அணிந்திருந்தாலும் இடைவெளியை பேணாததை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான நடைமுறை தொடருமாயின் எதிர்வரும் வரும் நாட்டிகளில் மீண்டும் தொற்று அதிகரிப்பதற்கான ஆபத்து உள்ளது.

ஆகவே மக்கள் தேவையற்ற விதத்திலே வீதியில் நடமாடுவதை தவிர்க்கவேண்டும். அதே வேளை வீடுகளில் தேவையற்ற நிழ்வுகளையும் தவிர்க்க வேண்டும். பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உள்ளிட்டவை அயல் வீடுகளுடன் இணைந்து நடத்துவதை அவதானிக்க முடிகின்றது. அவற்றை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தொற்று காணப்படுபவர்களுக்கு அநேகமாக வீடுகளில் வைத்தே சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான நோய் அதிகரிப்பு காணப்படுமிடத்து வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து வைத்தியசாலையில் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

நேற்று முன் தினம் முதல் 2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றம் பணிகள் 16 தடுப்பூசி செலுத்தும் நிலையங்களில் இடம் பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் ஏறத்தாழ 9,000 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இம்முறை மக்களின் சிரமங்களை தவிர்க்கும் வகையில் கிராமங்கள் தோறும் தடுப்பூசி நிலையங்களை அமைத்துள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் தூர இருக்கின்ற கிராமங்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும். அதேவேளை அடுத்த வாரம் தொடக்கம் வீடுகள் தோறும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசி போடுவதில் பின்னிக்கின்றார்கள். அவர்கள் அதனை தவிர்த்துக்கொள்ள விரும்புகின்றார்கள். அவ்வாறு உள்ளவர்கள் வீடுகளுக்கு வரும் பொழுது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்-என்றார். (அ)

# தென்மராட்சியில் அரச ஊழியர் ஐவருக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், செப். 08

தென்மராட்சியின் கொடிகாமம் சமுர்த்தி வங்கிக் கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் மூவர் உட்பட ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் சமுர்த்தி வங்கிக்கு சென்றிருந்தவர்கள் 44 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென்பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில், சமுத்தி உத்தியோகத்தர்கள் 03 பேர்,

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுனர் ஒருவர்,

சாவகச்சேரி நகரசபை ஊழியரான காவலாளி ஒருவர் ஆகியோரே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் நேற்று மன்னாரில் கவனவீர்ப்பு போராட்டம்

மன்னார், செப். 08



மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் இன்றைய நேற்று செவ்வாய்க்கிழமை காலை இரண்டு மணி நேரம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கக் கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக தற்போதைய கொரோனா காலப்பகுதியில் தமது சாதாரண கடமையை விட தற்போது அதிக நேரம் கடமையாற்றுவதாகவும், குறிப்பாக அன்ரிஜென், பி.சி.ஆர் பரிசோதனைகள் மற்றும் தனிமைப்படுத் தப்பட்டவர்களை பராமரித்தல் உள்ளிட்ட மேலதிக கடமைகளை மேற்கொண்டாலும், இதுவரை தமக்கான மேலதிக நேர கொடுப்பனவை வழங்கவில்லை என கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட வெளிக்கள குடும்ப நல உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

தமது மேலதிக நேர கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை அடங்கிய மகஜர் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கும் வகையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் அவர்கள் கையளித்தனர்.

இதன் போது மகஜரை பெற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் கருத்து தெரிவிக்கையில்-

மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதோடு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரை வட மாகாண ஆளுநருக்கு உடனடியாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

# ரிஷாத் பதியுதீனுக்கு விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, செப். 08

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதற்கமைய அவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதிக்கு உதவியதாக தெரிவித்து ரிஷாத் பதியுதீன் ஏப்ரல் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதனை அடுத்து அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீனும் வெள்ளவத்தைப் பகுதியில் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெரணியகலையில் சிறுமிக்கு எமனாக மாறியது தொட்டில்!

கொழும்பு, செப். 08

கேகாலை - தெரணியகலை - மாளிபொட தோட்டம் நிந்தகம பிரிவில் தொட்டிலில் சிக்கி 11வயதான சிறுமி பரிதாபமாக பலியானார்.

தெரணியகலை மாலிபொட தோட்டம் நிந்தகம பகுதியில் வசித்து வந்த 11 வயது கெனோரீடா டில்மினி என்ற சிறுமி நேற்று முன் தினம் மாலை 4 மணி அளவில் தனது வீட்டில் உள்ள தொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தொட்டிலில் சிக்குண்டு மரணமடைந்தார்.

சிறுமி நேற்று முன் தினம் மாலை 4 மணி அளவில் வீட்டில் உள்ள ஒரு அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டு தொட்டிலில் ஊஞ்சல் ஆடிக் கொண்டு இருந்துள்ளார். மற்றைய இரு சகோதரர்களும் அறையின் கதவு பூட்டியிருந்ததை அறிந்து கதவை தட்டியும் சிறுமி எந்தவித சத்தமும் இன்றி இருப்பதை அறிந்து தாயிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, தாய் கதவை தட்டியுள்ளார். கதவு திறக்காத நிலையில் வீட்டின் பின்புறமாக சென்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துள்ளார். அந்த சந்தர்ப்பத்தில் குறித்த சிறுமி தொட்டில் சேலையில் சிக்குண்டு தொங்கிக் கொண்டிருந்ததை அறிந்து இரண்டாவது மகளை ஜன்னல் வழியாக அறைக்குள் இறக்கி விட்டு பின்பு கதவைத் திறந்ததும் தாய் சென்று சிறுமியை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றும் சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தெரணியகலை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது .

# மங்கள சமரவீரவின் முதலீட்டு முயற்சிகளும் கூட்டுறவின் சொத்துக்களும்


காரைநகர் சேதனப்பசளை உற்பத்தியாலை திறப்புவிழா 02.07.2019




**“கூட்டுறவு இயக்கம்” மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டதா? மாகாண ஆளுகைக்கு உட்பட்டதா? என்ற வியாக்கியானங்களில் காலங்களை நம்மவர் கடத்திச் சென்ற வேளையில் போரினால் அழிந்து போன தமிழ் பிரதேசங்களை யும் சீர் குலைந்து போன மக்களையும் அரவணைத்து மீண் டும் வாழ்வளிக்க வல்ல கூட்டுறவுக்கு உதவும் வகை யில் தோழமையுடன் கரம் தந்தவர் மங்கள சமரவீர**

இலங்கை ஒரு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கிக்கொண்டு போகும் பொழுது பொருளாதாரத்தை தக்க வைக்கக் கூடிய வளங்கள் மற்றும் முதலீடுகள் பற்றிய கேள்வி எழுகிறது. மேலும் இந்த நெருக்கடி மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்து அவர்களின் நாளாந்த வாழ்க்கைக்கான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதையும் சிரமத்திற்குட்படுத்தியுள்ளது. இங்கு சுருங்கும் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான அரசாங்கத்தின் சாத்தியப்பாடுள்ள திட்டங்களோ பெரும் இலாபத்தை எதிர்பார்க்கும் தனியார் முதலீட்டாளர்களின் முயற்சிகளோ இல்லாமலிருக்கிறது. இந்த நிலையில் நாட்டிலிருக்கும் சொத்துக்களை உற்பத்தியை உருவாக்கும் முதலாக பயன்படுத்த வேண்டிய தேவையுண்டு.

**வளங்களின் மீள் பயன்பாடு**

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தில் ஒரு தசாப்தத்திற்குப் பின்னர் கூட மீள் கட்டுமானத்தில் ஏற்பட்டிருந்த தோல்வி மத்தியில் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு கூட்டுறவுத் துறைக்கு ஒரு பொறுப்புள்ளது எனும் பார்வையுடன் முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர பல திட்டங்களை முன்வைத்தார். 2018 - 2019ஆம் ஆண்டுகளில் ரூபாய் 250 கோடி அரச பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் அரசியல் உட்பட வேறு குழப்பங்களால் ஏறத்தாழ ரூபாய்100 கோடி முதலீடுகள் தான் வடமாகாண கூட்டுறவுத்துறைக்குள் விடுவிக்கப்பட்டது.

இந்த நிதியை பயன்படுத்தி வடக்கில் இருந்த நுண்கடன் பிரச்சினைக்கு ஒரு மாற்றுத்தீர்வாக அரவணைப்பு கடன் எனும் கூட்டுறவு துறையின் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அது தற்போது 40,000 சிறு கடன்களை வடமாகாணத்தில் சுழற்சிக்குள் கொண்டு வந்துள்ளது. மேலும் பால் பெறுமதி சேர்க்கும் ஆலைகள், தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய் உற்பத்தி ஆலைகள் மற்றும் சேதன பசளை உற்பத்தி ஆலைகள் போன்ற சிறு கூட்டுறவு கைத்தொழில் சாலைகளும் உருவாக்கப்பட்டன. இவ்வாறான முதலீடுகளும் யுத்தத்திற்கு பின்னர் சர்வதேச நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட அரிசி ஆலைகள் உட்பட பல சொத்துகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. இவை யாவற்றையும் உச்ச அளவில் பயன்படுத்தி உற்பத்திகளை அதிகரிக்கவேண்டிய தேவையுண்டு.

வர்த்தக வங்கிகளில் உள்ள பெருமளவிலான நிரந்தர வைப்புக்களை நிதிக் கூட்டுறவுகளுக்கூடாக மக்களின் வாழ்வாதாரத்திற்கான திட்டங்களை உருவாக்க பயன்படுத்த வேண்டும். குறிப்பாக பாலுற்பத்தியை அதிகரிக்கும் கால் நடை வளர்ப்புக்கான கடன்கள், விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான விவசாயக் கடன்கள், பணமாக அல்லது பொருளாக கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய கடன்திட்டங்கள் என தற்போதுள்ள திட்டங்கள் விரிவுபடுத்தப்படுவதோடு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். கூட்டுறவுத்துறைக்குள்ளும் நிதி தேவைப்படும் பகுதிகளுக்கு நிதியை வைத்திருக்கும் கூட்டுறவுகள் வழங்க முன்வரவேண்டும். எடுத்துக்காட்டாக நிதிக்கூட்டுறவுகள் உற்பத்திக்கூட்டுறவுகளின் உற்பத்தி செயல்பாடுகளுக்கோ நுகர்ச்சிக் கூட்டுறவுகளின் மொத்தக் கொள்வனவுகளுக்கோ நிதியை வழங்கலாம்.


பண்டத்தரிப்பு நல்லெண்ணெய் உற்பத்தி ஆலை திறப்புவிழா 02.07.2019

நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக நியாயமான விலையில் அத்தியாவசிய பொருட்களை வினியோகிக்க வேண்டும். அதாவது துறைரீதியாக கூட்டுறவுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து வலையமைப்பாக இயங்க வேண்டும். குறித்த பிரதேசத்தில் அதிகளவு உற்பத்தியாகும் பொருட்களை தேவையேற்படும் இடங்களுக்கு வினியோகம் அல்லது சந்தைப்படுத்தலை செய்யலாம். இதற்கு கூட்டுறவுகளிடம் உள்ள கட்டிடங்கள், வாகனங்கள், ஆளணி மற்றும் நிதி ஆகிய வளங்கள் இனங்காணப்பட்டு அவை உச்சமாக பயன்படுத்தப்படும்போது நியாயமான விலையில் பொருட்களை மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மங்கள சமரவீரவின் முதலீடுகள் உட்பட கூட்டுறவுத்துறையிடம் தற்போது ரூபா. 1,200 கோடிக்கும் அதிகமான சொத்துக்கள் உள்ளது. இவ்வாறான உற்பத்தி அதிகரிப்புகளை செய்வதற்கு இச்சொத்துக்களை முழுமையாக பயன்படுத்தும் போது யுத்தத்தாலும் தற்போதய கொவிட் நெருக்கடியாலும் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தின் கிராமப்புற பொருளாதாரத்திற்கு பயனுள்ளதாக இருக்கும்.

சிறுபான்மை மக்களின் உரிமைக்காக குரல்கொடுத்து போரால் பாதிக்கப்பட்ட மக்களின் கவலைகளுக்கு தீர்வுகளை தேடிய முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர 24.08.2021 இல் காலமானார். அவரின் இழப்பின் மத்தியில் அவர் பின்விட்டுச் சென்ற நோக்கங்களையும் அத்துடன் அவரின் தோழமையையும் முன்கொண்டு போகவேண்டும் எனும் பார்வையில் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபையால் 27.08.2021 அன்று வெளியிடப்பட்ட இரங்கலையும் இங்கு பதிவு செய்கிறோம்.

**கூட்டுறவு சபையின் இரங்கல்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர அவர்களை நாடு இழந்த செய்தி மிக மிக அதிர்ச்சியானதே. அவரின் இழப்பினை மீள் நிரப்ப முடியாத தலைமையாகவும், ஒரு யுக புருஷரை இழந்துவிட்டோம் என்றும் நாட்டின் சிரேஷ்ட தலைவரை இழந்தோம் என்றும், தமிழ் தேச மக்களின் நீதிக்காக அரசியல் விடுதலைக்காக பேசிய குரல் ஓய்ந்துவிட்டது என்றும், அரசியல் தலைமைகளின் துயர் நிறைந்த ஓலங்கள் ஒலித்த வண்ண மாக உள்ளது.

இங்கு கூட்டுறவாளர்களாகிய நாம் நல்லதொரு கூட்டுறவின் நண்பனை இழந்து துயரடைகின்றோம். நீதியான மக்கள் பணியிலும், ஜனநாயக மரபுகளிலும், சமூக ஏற்றத் தாழ்வு நீங்கிய சமதர்ம வாழ்விலும் நம்பிக்கையுடையவருமான அமரர் மங்கள சமரவீர அவர்கள் கூட்டுறவின்பாலும் நம்பிக்கையுடையவராக இருந்ததில் ஆச்சரியமில்லை.

கூட்டுறவால் பல விடயங்களை சாதிக்கலாம் என்று நம்பியவர். கூட்டுறவுத் துறையை “உறங்கிக் கிடக்கும் அரக்கன்” (sleeping giant) என்றார். அதனை தட்டி எழுப்ப உதவிக் கரம் நீட்டினார். அது உறக்கத்திலிருந்து எழும்ப முன்னர் தான் நிலையாகவே உறங்கி விட்டார். எம்மை ஏக்கத்தில் தவிக்க விட்டார்.

நல்லிணக்க பார்வையில் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் விசேட அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கினார். குறிப்பாக நுண்நிதி நிறுவனங்களால் கடன் பொறிக்குள் விழுந்த மக்களுக்கு ஒரு தீர்வாக வடக்கில் இருக்கும் நிதிக் கூட்டுறவுத் துறைக்கு 292 மில்லியன் ரூபாயை ஒதுக்கி அரவணைப்புக் கடன் திட்டத்தை உருவாக்கினார். மேலும் 450 மில்லியன் ரூபாயை உற்பத்தி கூட்டுறவுகளுக்கு 50 கைத்தொழில் சாலைகளை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்தார். இந்த அரவணைப்புக் கடன் திட்டத்தின் மூலம் நாற்பதாயிரம் சிறுகடன்கள் கூட்டுறவுக்கு ஊடாக விநியோகிக் கப்பட் டுள்ளது.

இத்தகைய ஒரு பணியினை முன்பு எந்த அரசியல் வாதிகளும் கூட்டுறவுக்கு செய்ததே இல்லை. யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு தானே நேரில் வந்து பல கலந்துரையாடல்களை நடத்தியும் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றிற்கு நேரில் சென்று அங்கத்தவர்களோடு கலந்துரையாடியும் நேரில் செயற்பாடுகளை பார்வையிட்டும் கூட்டுறவாளர்களோடு கூட்டுறவாளராக, நண்பனாக, நல்ல சேவையாளனாக ஆற்றிய பணிகளை கூட்டுறவுத் துறை நன்றியோடு மனம் கொள்கின்றது.

“கூட்டுறவு இயக்கம்” மத்திய அரசின் ஆளுகைக்கு உட்பட்டதா? மாகாண ஆளுகைக்கு உட்பட்டதா? என்ற வியாக்கியானங்களில் காலங்களை நம்மவர் கடத்திச் சென்ற வேளையில் போரினால் அழிந்து போன தமிழ் பிரதேசங்களையும் சீர் குலைந்து போன மக்களையும் அரவணைத்து மீண்டும் வாழ்வளிக்க வல்ல கூட்டுறவுக்கு உதவும் வகையில் தோழமையுடன் கரம் தந்தவர்.

அமரர் வெளிவிவகார அமைச்சராக இருந்த போது 2016 ஆம் ஆண்டில் வரலாற்றிலேயே முதல் தடவையாக இலங்கையினதும் இந்தியாவினுடையதும் அமைச்சர் மட்ட பேச்சுவார்த்தையை மேற்கொண்டு இந்திய இழுவைப்படகுகளால் பாதிக்கப்படும் வடக்கு கடற்றொழிலாளர் கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்தார்.

எளிமையான, இனிமையான, நேர்மையான, பண்பான, நீதியான ஒரு தலைவனை எம் கூட்டுறவு நண்பனை இழந்துவிட்டோம். இத் துயரில் எமது மாகாணம் சார்ந்த ஆயிரமாயிரம் கூட்டுறவாளர்களின் இதய அஞ்சலியை செலுத்தி அமரரின் ஆத்ம சாந்திக்கு ■


காரைநகரில் அரவணைப்பு கடன்திட்டத்தில் இணைந்த பெண்களுடனான கலந்தரையாடல் 02.07.2019

சீனாவின் வூஹான் மாநிலத்தில் ஆரம்பமான கொரோனாத் தொற்று தற்சமயம் உலகெங்கும் பரவி கோடிக்கணக்கான மக்களைப் பாதித்ததுடன் இலட்சக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டு வருகிறது. பெரும் வல்லரசுகள் கூட, இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுவதுடன் இதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றன. மருத்துவத்துறையில் மிக முன்னேறிய நாடுகள் எனக் கருதப்படும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கூட நாளாந்தம் இந்த நோய் காரணமாக மரணிப்போர் தொகையைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றன.

இலங்கையில் சீன உல்லாசப் பயணி ஒருவரில் ஆரம்பமான இந்த கொரோனா தொற்றின் முதலாவது அலை மிகக் குறைந்தளவு பாதிப்புகளுடன் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆனால் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை, பேலியகொடை பொருளாதார மத்திய நிலையம் என்பவற்றில் உருவானதாகக் கூறப்படும் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை மெல்ல மெல்ல நாடு முழுவதும் பரவி இன்று விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. அரசாங்கமும் அமைச்சர்களும் சுகாதாரத்துறையினரும் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். “இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்” என அமைச்சர் ஒருவர் கூறுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

அண்மையில் சுகாதார அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை 36 வீதத்தாலும் மரணமடைவோர் தொகை 64 வீதத்தாலும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தொற்றிவரும் டெல்ரா வைரஸ் முன்னையதைவிட 60 தொடக்கம் 70 வரை வீரியம் கூடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஏழு நாட்களில் மட்டும் மரணமடைவோர் தொகை 60 வீதமாக உயர்வடைந்து காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளையில் வைத்திய அதிகாரிகள் சங்கம், சுகாதாரப் பணியாளர்களில் 50 வீதமானோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் இனிவரும் நாட்களில் நோயாளிகளைப் பராமரிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிவருமெனவும் தெரிவித்துள்ளது. தற்சமயம் நாளொன்றுக்குத் தொற்றுக்கு உள்ளாவோர் தொகை நான்காயிரத்தைக் கடந்து விட்டது. மரணிப்போர் தொகையும் இருநூறை எட்டித் தொட்டு விட்டது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 4,700 பேர் நோய்த் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் பல வாரங்களுக்கு முன்பே பொதுச் சுகாதார வைத்தியர்கள் சங்கம், வைத்திய அதிகாரிகள் சங்கம், பல்கலைக்கழக ஆய்வு நிபுணர்கள் ஆகியோர் நாட்டை ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது முடக்கும்படி அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். ஆனால் அவர்களின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்க்கவில்லை. மாறாக மக்கள் பொறுப்பற்று நடக்கின்றனர் எனப் பழியை மக்கள் மீது போட்டுக் கொண்டிருந்தனர்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அரச தரப்பு உறுப்பினர் ஒருவர் அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரின் ஆர்ப்பாட்டங்களே கொரோனாத் தொற்று அதிகரிப்பதற்கான காரணம் எனக் கூறியிருந்தார். அங்கு உரையாற்றிய அமைச்சர் ஒருவரோ நாளாந்தம் கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள், மற்றும் நடைபாதை வியாபாரி கள் நாட்டை முடக்கினால் பட்டினி கிடக்க வேண்டி வருமெனக் கவலைப்பட்டார்.




# கொரோனா தொற்றும் விலைவாசி உயர்வும்

இதில் முக்கியமான விடயம் என்னவெனில் அரச தரப்பிடமிருந்து குற்றங்களை மற்றவர்கள் மேல் சுமத்தும் கருத்துகள் வெளிவருகின்றனவேயொழிய அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஆரம்பம் எதுவும் தென்படுவதாக இல்லை.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தையடுத்து அதன் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும உலக நாடுகள் கொரோனாவைக் கட்டுப்படுத்த மூன்று வழிகளைக் கையாள்கின்றன எனவும் முதலாவது முழுமையாக நாட்டை முடக்குவது, இரண்டாவது நாட்டை முடக்காமல் தடுப்பூசிகளை ஏற்றல், மூன்றாவது ஒரு பகுதியினருக்கு தடுப்பூசி வழங்கிய பின்பு நாட்டைப் பகுதிபகுதியாகத் திறப்பது எனவும் தாங்கள் மூன்றாவது முறையையே பின்பற்றுவதாகத் தெரிவித்தார்.

அதிலிருந்து ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். அதாவது அரசாங்கத்தின் தற்போதைய வழிமுறையே பின்பற்றப்படும் என்பதுதான் அது. நடைமுறையில் இப்போது அரசாங்கம் தடுப்பூசி ஏற்றவதைப் பிரதானவழியாக ஏற்றுக்கொண்டு விட்டது. ஆனால் புதிதாகத் தொற்றுக்கு உட்படுபவர்களின் பிரச்னை இரண்டாம் பட்சமாகவே பார்க்கப்படுகிறது.

போதிய விடுதி வசதிகள், கட்டில் வசதிகள் ஒட்சிசன் சிலிண்டர் வசதிகளில் பற்றாக்குறையே காணப்படுகின்றன. அதேவேளையில் மருத்துவர்கள், தாதியர்கள் உட்பட சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோருக்கும் பற்றாக்குறையே நிலவுகிறது. இந்த நிலையைச் சமாளிக்க அறிகுறிகள் காணப்படாத தொற்றாளர்களை வீடுகளில் வைத்தே பராமரிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழிமுறையில் எவ்வளவு தான் கட்டுப்பாடாக இருந்தாலும் நோய் தொற்றுக்குள்ளானவரின் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்குப் பரவாது எனச் சொல்லிவிடமுடியாது.

இப்படியான நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்தச் சில நாட்களாவது நாட்டை முடக்கும்படி எதிர்க்கட்சியினரும் சுகாதாரத் துறையினரும் விடுத்த கோரிக்கைகளை அரசாங்கம் புறந்தள்ளி வந்தது. எனினும் மகாநாயக்க தேரர்களின் வலியுறுத்தலையடுத்து கடந்த 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அது பின்பு நீடிக்கப்பட்டது.

இவ்வாறு கொரோனா தொற்று மனித உயிர் வாழ்வுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில் இன்னுமொரு பக்கத்தால் நாளாந்தம் கொரோனா தொற்றுக்குச் சமாந்தரமாக அதிகரித்துவரும் விலைவாசி, நாளாந்த வாழ்வைக் கடத்த முடியாமல் மக்களைத திண்டாட வைக்கிறது.

அரிசி மா, சீனி, கருவாடு, ரின் மீன், பருப்பு போன்ற அத்தியாவசியப் பாவனைப்பொருட்கள் பதுக்கப்பட்டு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கின் நெற்களஞ்சியமான மட்டக்களப்பில் 2,500 மெற்றிக் தொன் நெல் மதுசார உற்பத்திக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதேவேளையில் அரிசி ஆலை உரிமையாளர்களாலும் மொத்த வியாபாரிகளாலும் பல்லாயிரக் கணக்கான மெற்றிக் தொன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக 85 ரூபாய் விற்ற அரிசி தற்சமயம் 140 ரூபாய்க்கு விற்கப் படுகிறது. அதேவேளையில் கடந்த அறுவடை காலத்தில் விவசாயிகளிட மிருந்து ஒரு கிலோ நெல் 50 ரூபாய்க்கும் குறைந்த விலையிலேயே கொள்முதல் செய்யப்பட்டது.

இன்னொருபுறம் அண்மையில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளின் போது 11,070 மெ.தொன் சீனி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 8 மாதங்களாகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கொழும்பு மாவட்டத்தில் வத்தளையில் 1,200 தொன்னும், கிவுள்பத்துகமவில் 8 மாதங்களாகப் பதுக்கி வைக்கப்பட்ட 37,770 தொன்னும், கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதேவேளையில் கடந்த மாதம் 135 ரூபாய் விற்ற சீனி தற்சமயம் 220 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அவ்வாறே கடந்த மாதம் 167 ரூபாய் விற்ற பருப்பு 250 ரூபாவாகவும் 238 ரூபாய் விற்ற உருளைக்கிழக்கு 295 ரூபாவாகவும் 360 ரூபாய் விற்ற கௌபி 680 ரூபாயாகவும் விலையுயர்த்தப்பட்டுள்ளன.

நா.யோகேந்திரநாதன்

அதாவது பெரும் வர்த்தக முதலைகள் தங்கள் இரகசியக் களஞ்சி யங்களில் ஏராளமான நாளாந்த உணவுத் தேவைக்கான பொருட்களை பதுக்கி வைத்து அநியாய விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் அள்ளிக் குவிக்கின்றனர்.

ஆனால், மக்கள் குறிப்பாகச் சுயதொழில் செய்பவர்கள், கூலித் தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள் போன்றோர் ஒருபுறம் ஊரடங்கு காரணமாகத் தொழிலின்றி வருமானம் இழந்தும் விலைவாசி உயர்வு காரணமாக தேவையான பொருட்களை வாங்க முடியாமலும் திணறுகின்றனர். போதுமான உணவு கிடைக்காத நிலையில் உடலில் உட்டச் சத்துக் குறைபாடு காரணமாக இவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி பல வீனமடைகிறது. எனவே இவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

எனினும், தற்சமயம் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு பதுக்கல்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அத்துடன் அரிசி, சீனி ஆகியவற்றுக்கான கட்டுப்பாட்டு விலையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவை வெற்றி பெறுமானால் மகிழ்ச்சியான விடயமாகத்தான் இருக்கும். ஆனால் இவை வெற்றிபெறுமா என்பதுதான் கேள்விக்குரிய பிரச்சினையாக இருக்கின்றது.

எனவே, இன்று நாட்டு மக்கள் இருவிதமான ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. ஒன்று கொரோனாவால் சாதாரண மக்களின் வருமான இழப்பு காரணமாக ஊட்டமுள்ள உணவு கிடைக்காத காரணத்தால் உடல் பலவீனமடையும் நிலை. மற்றது உடல் பலவீனமடைவதால் நோயெதிர்ப்பு சக்தியை இழந்து தொற்றுக்குள்ளாதல்.

அரசாங்கம் கொரோனாவைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட ஊரடங்குச் சட்டமும் பதுக்கலைத் தடுத்து விலைவாசியை இயல்புக்குக் கொண்டுவரப் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டமும் எதிர்பார்த்தளவு வெற்றியளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை.

இன்னொருபுறம் சுற்றுலாத்துறையும் ஆடைத்தொழிற்சாலைகளும் எவ்வித கட்டுப்பாடுமின்றி இயங்கி வருகின்றன. ஏற்கனவே ஆடைத் தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டே பல கொரோனா கொத்தணிகள் உருவாகின என்பதை மறந்து விடமுடியாது.

எனவே கொரோனா ஆபத்தைத் தடுத்து நிறுத்த நம்பிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் எம்மை நாமே பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம். இரு தடவைகளும் தடுப்பூசிகளைப் போட்டாலும் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்ற நிலையில் தொற்று எற்பட்டாலும் உரியமுறையில், உரிய நேரத்தில், உரிய சிகிச்சை கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. மருத்துவமனைகள் நிரம்பி வழியும் நிலையில் சிகிச்சை பெறுவதும் சிரமமே.

எனவே நாம் சுகாதார வழிமுறைகளை இறுக்கமாக அனுசரித்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதே கடுமையான நோய்ப்பாதிப்பையோ அல்லது மரணத்தையோ தவிர்க்க உள்ள ஒரே வழியாகும்.

-நன்றி: அருவி


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

- 35, 36 ஆகிய வினாக்களில், தொடக்கத்தில், ஊடு தெரியக்கூடிய சதுர வடிவக் கடதாசிகள் தரப்பட்டுள்ளன. அவற்றினை முறிகோடுகள் வழியே இரண்டாக மடித்துப் பார்க்கும் போது காணக்கூடிய உருவைத் தெரிவு செய்க.


35. 

(1) (2) (3)

36. 

(1) (2) (3)

37. அருகே உள்ள உருவில் A, B, C ஆகியவற்றால் குறிக்கப் படுவனவற்றை முறையே காட்டும் விடையைத் தெரிவு செய்க.





(1) விலங்குகள், நாய், எலி
(2) மனிதர்கள், ஆண்கள், பெண்கள்
(3) விலங்குகள், ஊனுண்ணிவிலங்குகள், புலி

38. ஒரு குழுவில் உள்ள 6 பேர்களிடையே ஆண்தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 2 பேனைகளும் பெண்தரப்பில் ஒவ்வொருவருடைய கையிலும் 3 பேனைகளும் இருந்தன பேனைகளின் மொத்த எண்ணிக்கை 16 எனின், குழுவில் உள்ள ஆண்களின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 3 (3) 4

39. உரு A இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைக் கொண்ட ஒரு தாள் முறிந்த கோடு வழியே மடிக்கப்பட்டு உரு B இல் காட்டப்பட்டுள்ள வடிவத்தைப் பெற்று, அதில் காட்டப்பட்ட முறிந்த கோடு வழியே வெட்டித் துண்டுகளாக்கப்பட்டது. கிடைத்த முக்கோணித் துண்டுகளின் எண்ணிக்கை யாது?




(1) 3 (2) 4 (3) 6

40. மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவர்களை, குழு ஒன்றில் குறைந்தது ஒரு பிள்ளையும் கூடியது மூன்று பிள்ளைகளும் இடம்பெறும் வகையில் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட விதங்களில் எத்தனை குழுக்களாக ஆக்க முடியும்?

(1) 4 (2) 6 (3) 7

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

வானில் அங்குமிங்கும் பறந்து திரியும் பறவைகளின் கானம் சூழலை இனிமையாக்குகிறது. மெல்லிய குளிர்காற்று மேனியைச் சில்லிட வைக்கிறது. தோட்டத்துப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன. வண்ணத்துப் பூச்சிகள் தேனைப் பருகப் பூக்களை நாடி வருகின்றன. முத்துக்கள் போன்ற பனித்துளிகள் இலைகளில் படிந்திருக்கும் காட்சி மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது. இளஞ்சூரியனின் பொன்னொளிபட்டு உலகு ஒளிமயமாகிறது.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) எது சூழலை இனிமையாக்குகிறது? : ..........................................
(ii) வண்ணத்துப் பூச்சிகள் பூக்களை நாடி வரக் காரணம் யாது?
: ..........................................
(iii) முத்துக்களுக்கு ஒப்பாகக் கூறப்பட்டவை எவை? : ..........................................
(iv) இணைமொழி ஒன்றினைத் தருக. : ..........................................
(v) இன்பம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. : ..........................................
(vi) உலகு எதனால் ஒளிமயமாகிறது?
: ..........................................

2. உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) உண்டான் (2) பாடியது (3) ஆடுகின்றனர்

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

எமது / வளர்ச்சி / பொது அறிவு / பத்திரிகைகள் / அடைகிறது / வாசிப்பதால்

..........................................
..........................................

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு **சரியாயின்** (✓) எனவும் **பிழையாயின்** (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் அடையாளமிடுக.

(i) குளத்திலே மீன்கள் நீந்துகின்றன. (............)
(ii) மின்சாரம் தடைப்பட்டதால் மின் விளக்குகள் அணைந்தன. (............)
(iii) சிறிய சிறிய அருவிகளின் பாய்ச்சல் அழகாக இருந்தன. (............)
(iv) நட்சத்திரங்கள் வானத்தை அலங்கரித்தது. (............)

5. (i) பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கிட்டாதாயின் .......................................... மற

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கூடிய ஆசை துன்பத்தைத் தரும்

..........................................

# அவசரகால சட்டத்தை தவறாக பயன்படுத்த யாரையும் ஜனாதிபதி அனுமதிக்கக்கூடாது

## பாராளுமன்றத்தில் திஸ்ஸ விதாரண எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, செப். 08

அவசரகாலச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்த எவருக்கும் ஜனாதிபதி அனுமதியளிக்கக் கூடாது என்று ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அவசர காலச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"இந்த காலப்பகுதியில் கொரோனா தொடர்பில் நாங்கள் கூறினாலும், இதனையும்விட பாரதூரமான பிரச்னையாக பசியும் உணவுப் பற்றாக்குறையும் போஷாக்குக் குறைபாடுமே உள்ளது. 5 வயதுக்குக் குறைந்த 17 சதவீதமான குழந்தைகளுக்கு போஷாக்கு குறைப்பாடு உள்ளது. அதாவது 5 குழந்தைகளில் ஒரு குழந்தை போஷாக்கு குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள 68 சதவீதமான மக்களின் குழந்தைகள்தான் இவ்வாறு போஷனை குறைப்பாட்டால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

பசி மற்றும் உணவு தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாது வாழும் மக்களுக்கு எதனையாவது செய்ய வேண்டும். முதலாளித்துவவாதிகள் எப்போதும் தமது இலாபத்தைத் தேடவே பார்க்கின்றனர். அவசர காலச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நான் எப்போதும் எதிரானவன். ஆனால், இந்தத் தருணத்தில் அவசரகாலச் சட்டம் அவசியம்.

அவசரகாலச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்த எவருக்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம். எதிர்காலத்தில் எமது விவசாய உற்பத்திகளை அதிகரிக்கவும் இடைதரகர்களின் சூறையாடல்களை தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" - என்றார். (இ)

---

## ஜெனிவா விவகாரத்தை பயன்படுத்தி

# கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது



## சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, செப். 08

**"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பும் விவகாரத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தச் சக்தியாலும் பிளவுபடுத்தவே முடியாது."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து, தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பத் தயாரித்த அறிக்கையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில்தமிழரசுக்கட்சி தவிர்ந்த ரெலோவும், புளொட்டும் கையெழுத்திட்டுள்ள விவகாரம் சூடுபிடித்துள்ளது. இது கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதை வெளிக்காட்டுகின்றது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாகத் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளொட் ஆகிய மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஏனைய தமிழ்க் கட்சிகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பத் தயாரித்த அறிக்கையில் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய இரு பங்காளிக் கட்சிகள் (ரெலோ, புளொட்) கையெழுத்திட்டமை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. இது தொடர்பில் எனக்கு அறிவிக்கப்படவும் இல்லை.

எனவே, இந்த விடயம் தொடர்பில் என்னால் கருத்துத் தெரிவிக்கவும் முடியாது.

ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பும் விவகாரத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தச்சக்தியாலும் பிளவுபடுத்த முடியாது என்பதை இந்தச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்" - என்றார். (இ)

---

## ஹெரோயினுடன் பெண்ணொருவர் மாத்தறையில் கைது

மாத்தறை, செப். 08

மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஸ்ஸந்தெனிய பிரதேசத்தில முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 2 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மாத்தறை தேவிநுவர பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண் விசாரணைகளின் பின்னர் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

---

## பசறையில் ஒரே நாளில் 49 பேருக்கு கொரோனா

பசறை, செப். 08

பசறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஒரே நாளில் 49 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

பசறை மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முன்னதாக தொற்று உறுதியானவர்களுடன் தொடர்புடையோருக்கு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 38 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், பசறை பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 11 நோயாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் 29 பேர் மீதும் பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

## தெஹிவளையில் பாலியல் தொழில் ஏழு பெண்கள் வசமாக சிக்கினார்கள்

கொழும்பு, செப். 08

பாலியல் தொழில் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது அவ்வீட்டில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட 7 பெண்களும், ஆண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்களில் இருவர் 23, 29 வயதான பாணந்துறை மற்றும் வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், ஏனைய 5 பெண் களும் வெளிநாட்டவர்கள் எனவும் பொலிஸாரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

---

## வவுனியாவில் மேலும் மூவர் கொரோனாவால் உயிரிழப்பு

வவுனியா, செப். 08

வவுனியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூன்று பேர் மரணமடைந்தனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வெளிக்குளம் பகுதியில் 52 வயதுடைய பெண் ஒருவரும், வைரவபுளியங்குளம் பகுதியில் 85 வயதுடைய ஆண் ஒருவரும், கோவில்புதுக்குளம் பகுதியில் 91 வயதுடைய பெண் ஒருவரும் என 3 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று மரணமடைந்தனர்.

இந்நிலையில் மரணித்த 3 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

---

## ஊரடங்கு சட்ட விதிகளை மீறிய மேலும் 665 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 665 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய, நாட்டில் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆயிரத்து 668 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 69 வாகனங்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# ஏழை நாடுகளுக்கு 10 கோடி தடுப்பூசி

## ஜி - 20 நாடுகள் தீர்மானம்




ரோம், செப். 08

கோவிட் 19 தொற்று நோயை கட்டுப்படுத்த உதவும் வகையில் ஏழை நாடுகளுக்கு நிதி மற்றும் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்க ஜி - 20 நாடுகளின் சுகாதார அமைச்சர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரோமில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஜி -20 நாடுகளின் சுகாதார அமைச்சர்களின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இத்தாலிய சுகாதார அமைச்சர் ரொபர்டோ ஸ்பெரான்சா தெரிவித்தார். தொற்று நோயை உலகம் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும். தொற்று நோய்க்கு எதிரான போரில் எந்தவொரு நாட்டையும் தனித்து விடக்கூடாது என மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர்கள் கூட்டாகத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தத் தீர்மானத்தை தடுப்பூசி விநியோகத்திற்கான “ரோம் ஒப்பந்தம்” என செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ரொபர்டோ ஸ்பெரான்சா விபரித்தார். இந்த ஆண்டு இறுதிக்குள் ஏழை நாடுகளுக்கு குறைந்தபட்சம் 10 கோடி கோவிட் -19 தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்க தங்கள் நாடு உறுதிபூண்டுள்ளதாக ஜேர்மனி சுகாதார அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான் இந்தக் கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் அனைவருக்கும் தடுப்பூசிகள் கிடைக்கும் போதே தொற்று நோயை எதிர்த்துப் போராட முடியும். உலகில் எந்தவொரு பகுதியிலும் தடுப்பூசி போடாத மக்கள் இருக்கும் வரை அவர்கள் மூலம் புதிய திரிபு கொத்தணிகள் உருவாகி அது முழு உலகுக்கும் பரவும் எனவும் அவர் கூறினார்.

2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் உலக மக்கள்தொகையில் குறைந்தது 40 வீதமானவர்கள் முழுமையாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு ஆணையர் ஸ்டெல்லா கிரியா கிடிஸ் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.



## இராணுவ ஆட்சியாளர்களால் சர்ச்சை பிக்கு விராது விடுதலை!

யங்கூன், செப். 08

மியன்மாரில் இஸ்லாமிய விரோத பேச்சுக்கு பெயர் பெற்ற பிக்குவான அஷின் விராது இராணுவ ஆட்சியாளர்களால் விடுதலை செய்யப்பட்டார்.

மியன்மாரின் ‘பயர் பிராண்ட்’ பிக்கு என அடையாளப்படுத்தப்படும் விராது பிக்கு இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துக்களுக்கும், இராணுவ சார்பு கருத்துகளுக்கும் பெயர் பெற்றவர். இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துக்களால் இவர் பௌத்த பின்லேடன் என்றும் அழைக்கப்பட்டார். முன்னர் இருந்த சிவில் அராசாங்கம் அவர்மீது தேசத் துரோக குற்றச்சாட்டப்பட்டார்.

2019 ஆம் ஆண்டு வெறுப்பு மற்றும் அவமதிப்பை தூண்டினாரென அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கடந்த ஆண்டு நவம்பரில் அவர் சரணடைய முன்பாக தப்பிச் செல்ல முயன்றிருந்தார்.

இந்த நிலையில், அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விராது பிக்கு விடுவிக்கப்படுகின்றார் என்று கடந்த திங்கட்கிழமை இராணுவ அரசு அறிவித்தது. ஆனால், இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. (ஐ)

## சட்டத்தை நீக்காவிட்டால் உறவு வைக்க மாட்டோம்!

### அமெரிக்க பெண்கள் நூதன போராட்டம்




வாஷிங்டன், செப். 08

அமெரிக்காவில் கருக்கலைப்புக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து பெண்கள் நடத்தும் நூதன போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கருக்கலைப்பு செய்வது குற்றம் என்பதால், அமெரிக்காவின் ரெக்ஸாஸ் மாகாணம் அதற்கு தடை விதித்துள்ளது. வயிற்றில் சிசுவின் இதயத் துடிப்பு கேட்க முன்பாக கருக்கலைப்பு செய்யலாம் என்று அந்த மாகாண அரசு அறிவித்துள்ளது.

ஆனால், 6 வார காலத்திற்குள் கருவுற்றிருப்பதே பெண்கள் பலருக்கு தெரிய வர வாய்ப்பில்லை. இதனால், இந்த சட்டத்துக்கு பெண்களில் ஒரு சாரார் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த சட்டத்தை திரும்பப் பெறாவிட்டால் ஆண்கள் தங்களுடன் உறவு வைத்துக் கொள்ள முடியாது என்று அறிவித்துள்ளனர்.

இந்த நூதன போராட்டத்திற்கு நடிகையும் பாடகியுமான பேட் மில்லர் அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இஸ்ரேல் சிறையிலிருந்து 6 பலஸ்தீனர்கள் தப்பினர்!

ஜெருசலேம், செப். 08

இஸ்ரேலின் அதி பாதுகாப்பு நிறைந்த சிறைச்சாலையிலிருந்து 6 பலஸ்தீனர்கள் தப்பி சென்றுள்ளனர். இதையடுத்து இஸ்ரேல் அதிகாரிகள் தீவிர தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இஸ்ரேலின் அதிபாதுகாப்பு நிறைந்த சிறைகளில் ஒன்றாகக் கருதப்படும் கில்போவா சிறையிலிருந்தே பலஸ்தீனியர்கள் தப்பிச் சென்றுள்ளனர். தப்பியவர்கள் தங்கள் சிறை அறியிலிருந்து சுரங்க பாதை ஒன்றை தோண்டியுள்ளனர். இந்த சுரங்கப்பாதை வெளிப்புற சுவருக்கு அருகே முடிவடைந்தது. இதனூடாக ஊர்ந்து சென்று அவர்கள் தப்பியிருந்தனர்.

வயல்வெளிகளின் வழியே தப்பியவர்கள் குறித்து விவசாயிகள் அதிகாரிகளுக்கு எச்சரித்தனர். தப்பியவர்கள் அல் அக்ஸா மார்ட்ரிஸ் படையின் முன்னாள் தளபதி ஜகாரிய சுபைடி மற்றும் 5 இஸ்லாமிய ஜிகாத்தினர் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் தங்கள் குளியல் அறையில் தண்ணீர் செல்லும் பாதையின் மேல் பகுதியான சிமெந்தே துருப்பிடித்த கரண்டி ஒன்றினால் தோண்டி அதன் வழியே சென்று சிறையின் வெளியே செல்வதற்கு பாதை ஒன்றை உருவாக்கியிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

6 சிறைக் கைதிகளும் சிறையில் இருந்து தப்பியமை இஸ்ரேலின் பாதுகாப்பு - உளவு துறையின் தோல்வியாகப் பார்க்கப்படுகின்றது. மறுபுறத்தில் பலஸ்தீனர்கள் இதனை பெரும் வீரச் செயலாகக் கொண்டாடி வருகின்றனர். (ஐ)



## ஆட்சி அமைப்பதில் போட்டி தலிபான்களிடையே மோதல்!



காபூல், செப். 08

ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைப்பதில் தலிபான் பிரிவுகளிடையே ஏற்பட்ட மோதலில் அதன் அரசியல் குழு தலைவர் முல்லா அப்துல் கனி பரதர் காயம் அடைந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கடந்த 15ஆம் திகதி முழுமையாக கைப்பற்றினர். ஆனால், அங்கு இன்னமும் ஆட்சி ஏற்படுத்தப்படவில்லை. இதற்கு அவர்களிடையே உள்ள மோதலே காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், ஆட்சி அமைப்பது தொடர்பில் தலிபான்கள், ஹக்கானி வலைக்குழுவினர் அண்மையில் பேச்சு நடத்தினர். இதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி மோதலாக மாறியதில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலேயே அரசியல் குழு தலைவர் காயமடைந்தார்.

இந்த மோதலையடுத்து பாகிஸ்தான் பைஸ் ஹமீத் காபூலுக்கு சென்றுள்ளார். இவர் தலிபான் பிரிவினரிடையே சமரசம் ஏற்படுத்த முயன்று வருகிறார் என அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## கொரோனாவை பரப்பிய இளைஞருக்கு 5 ஆண்டு சிறை!

### வியட்நாம் நீதிமன்றம் விதித்தது

ஹோசிமின், செப். 08

வியட்நாமில் கொரோனா தனிமைப்படுத்தல் விதிகளை மீறினார், பொதுமக்களுக்கு வைரஸை பரப்பினார் என்ற குற்றங்களுக்காக 28 வயது நபர் ஒருவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வியட்நாமைச் சேர்ந்த லீ வான் ட்ரை என்ற இளைஞர் விதிமுறைகளை மீறி பலருக்கும் வைரஸை பரப்பியுள்ளார். அவர் அரசின் கொரோனா கட்டுப்பாடு விதிகளை மீறி ஹோ சி மின் நகரத்தில் இருந்து தனது சொந்த மாகாணமான காமாவுக்கு சென்றுள்ளார்.

அதாவது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட அவர் 21 நாள் தனிமைப்படுத்துதல் விதிகளை மீறி பயணம் செய்துள்ளார்.

அவரின் இந்த பொறுப்பின்மையால் சுமார் 8 பேர் தொற்றுக்கு உள்ளாகினர். இவர்களில் ஒருவர் உயிரிழந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டார். குற்றங்கள் உறுதியானமையால் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார் நீதிபதி.

வியட்னாம் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதில் மிக இறுக்கமான விதிகளை கொண்டுள்ளது. உலகில் தொற்றை வெற்றி கொண்ட நாடாக ஆரம்பத்தில் இருந்தபோதும், ஏப்ரல் மாதத்தின் பின்னர் அங்கு நிலைமை மாறியது. இதனால், தொற்று கட்டுப்பாடுகளை மீறியவர்களை கண்டறிந்து அவர்களுக்கு அரசு தண்டனை அளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்:

# பும்ரா, தாகூர் அசத்தல்! இந்தியா அபார வெற்றி

லண்டன், செப். 08

பும்ராவின் அற்புதமான பந்துவீச்சு, உமேஷ், ஜடேஜா, தாகூரின் பங்களிப்பு ஆகியவற்றால் இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியை 157 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இந்திய அணி. 50 ஆண்டுகளின் பின்னர் ஓவல் மைதானத்தில் இந்திய அணி பெற்ற முதல் டெஸ்ட் வெற்றி இதுவாகும். அத்துடன், இங்கிலாந்து மண்ணில், இந்திய அணி 36 வருடங்களின் பின்னர் தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில், 368 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் கடைசிநாள் ஆட்டத்தை தொடங்கிய இங்கிலாந்து அணி 92. 2 ஓவர்களில் 210 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 157 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

ஓவல் ஆடுகளம் கடைசி நாள் முழுவதும் துடுப்பாட்ட வீரர்களுக்குத்தான் சாதகமாக



இருக்கும் என தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்திய பந்துவீச்சாளர்கள் அடுத்தடுத்து விக்கெட்களை வீழ்த்தி இங்கிலாந்து அணிக்கு நெருக்கடி வழங்கினார்கள். இறுதிநாளில் 2 விக்கெட்களை வீழ்த்திய பும்ரா, டெஸ்ட் போட்டியில் அதிவிரைவாக 100 விக்கெட்களை கைப்பற்றிய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

இங்கிலாந்து அணிக்கு தொடக்க வீரர்கள் ரோறி பேர்ன்ஸ், ஹசீப் இருவரும் நல்ல ஆரம்பத்தை அமைத்துக் கொடுத்தனர். இருவரும் இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களை பெற்றிருந்தனர்.

நேற்று முன்தினம் மதிய போசன இடைவேளைக்கு முன்பாக இங்கிலாந்து அணியின் வசமிருந்த ஆட்டத்தின் சாதக தன்மை, இடைவேளைக்கு பின்பு இந்தியாவின் பக்கமாக மாறியது.

பேர்ன்ஸ் 50, ஹசீப் ஹமீத் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டேவிட் மலன் 5 ஓட்டங்களுடன் "ரன்அவுட்" ஆகி ஏமாற்றம் அளித்தார். 100 ஓட்டங்களுக்கு எந்த விக்கெட்டையும் இழக்காமல் இருந்த இங்கிலாந்து அணி அடுத்த 47 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்களை இழந்தது. குறிப்பாக 141 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்திருந்த இங்கிலாந்து அடுத்த 6 ஓவர்களில் 6 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுகளை மளமளவென இழந்தது. இதுதான் ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்தது.

ஒலே போப் (2), பெயர்ஸ்ரோ (0),மொயின் அலி(0) என வரிசையாக வெளியேறியமை இங்கிலாந்து அணியின் வெற்றிக் கனவைக் கலைத்தது. நிதானமாக ஆடிய ரூட்டும் 36 ஓட்டங்களில் தாகூரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் வோக்ஸ் (18), ஓவர்ரன்(10), அண்டர்சன்(2) ஆகியோர் உமேஷ் யாதவ் பந்துவீச்சில் விரைவாக வெளியேற இங்கிலாந்து அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. மதிய போசனத்துக்குப் பின் இந்தியப் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல், இங்கிலாந்து அணி 25.1 ஓவர்களில் 62 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்தது.

போட்டி நாயகனாக இரண்டாவது இனிங்ஸில் சதம் அடித்து அசத்திய ரோஹித் சர்மாவுக்கு வழங்கப்பட்டது. (ஐ)



## விராட் கோலி புதிய சாதனை!

லண்டன், செப். 08

சேனா (SENA) நாடுகள் எனப்படும் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிகமான வெற்றிகளை பெற்ற ஆசிய அணித் தலைவர் என்ற பெருமையை கோலி பெற்றுள்ளார்.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடந்த நான்காவது டெஸ்ட் போட்டியை இந்திய அணி வெற்றி கொண்டது. இதன் மூலம், 65 போட்டிகளில் அணியை வழிநடத்திய கோலி 38 போட்டிகளில் வெற்றி பெற்றது. அத்துடன், 16 போட்டிகளில் தோல்வியையும், 11 போட்டிகளில் சமநிலையையும்

இந்திய அணிக்கு விராட் கோலி இதுவரை 65 போட்டிகளுக்கு கேப்டனாகச் செயல்பட்டுள்ளார். இதில், 38 போட்டிகள் வெற்றியிலும், 16 போட்டிகள் தோல்வியும்11 போட்டிகள் சமநிலையிலும் முடிவடைந்தன.

விராட் கோலியின் வெற்றி சதவீதம் 58.46 ஆக இருக்கிறது. இந்திய அணித் தலைவர்களிலும் அதிகமான வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தவர் என்ற பெருமை விராட் கோலியையே சாரும். 2019ஆம் ஆண்டு டோனிக்குப் பின் டெஸ்ட் போட்டிகளில் வெற்றிகரமான அணித் தலைவராக கோலி வலம் வருகிறார்.

இதில் இங்கிலாந்து மண்ணில் அந்த நாட்டு அணிக்கு எதிராக கோலி இதுவரை 3 வெற்றிகளையும், அவுஸ்திரேலிய மண்ணில் 2 வெற்றிகளையும், தென்னாபிரிக்காவுக்கு எதிராக அந்த மண்ணில் ஒரு வெற்றியையும் கோலி தலைமையிலான இந்திய அணி பதிவு செய்துள்ளது. இதன் மூலம் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு எதிராக அந்த நாட்டு மண்ணில் அதிகமான வெற்றிகளைப் பெற்ற ஆசிய அணிகளின் தலைவர் என்ற பெருமையையும் கோலி பெற்றுள்ளார். (ஐ)

## 100 விக்கெட்கள் பும்ரா மைல்கல்!

லண்டன், செப். 08

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா 100 விக்கெட் என்ற மைல்கல்லை தொட்டார். இதே சமயம் மிகக் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்களை வீழ்த்திய இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

ஓவல் டெஸ்ட்டில் 2 விக்கெட்களை கைப்பற்றியதன் மூலமே இந்த சாதனையை அவர் படைத்தார். இங்கிலாந்து வீரர் ஒலே போப்பை தனது 100ஆவது டெஸ்ட் விக்கெட்டாக சாய்த்தார்.

இதற்கு முன் அந்த அணியின் கபில் தேவ் 25 போட்டிகளில் 100 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். அவரின் சாதனையை முறியடித்த பும்ரா 24 போட்டிகளில் 100ஆவது விக்கெட்களை எட்டிவிட்டார். கபில் தேவுக்கு அடுத்த இடத்தில் இர்பான் பதான் 28 போட்டிகளில் இந்த சாதனையை படைத்துள்ளனர். (ஐ)





## அமெரிக்க ஓப்பன்:

## பிரிட்டனின் இளம்வீராங்கனை காலிறுதிக்கு முன்னேறினார்!

நியூயோர்க், செப். 08

பிரிட்டனின் இளம்வீராங்கனையான எம்மா ரடுசனு அமெரிக்க ஓப்பனில் காலிறுதிக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது.

இதில் நேற்று நடந்த நான்காவது சுற்று போட்டியில் 18 வயதான பிரிட்டனின் எம்மா ரடுசனு அமெரிக்காவின் செப்லி ரோஜர்ஸை எதிர்கொண்டார்.

இதில் அழகான ஆட்டத்தை வெளிப்படுத்திய எம்மா 6-2, 6-1 என்ற செற்களில் அவர் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

# கலப்பு தேர்தல் முறைமையே அவசியம்!

## பாராளுமன்ற விசேட குழுவில் மக்கள் ஐக்கிய முன்னணி வலியுறுத்து



**கொழும்பு, செப்.08**

**"தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவத்துடன் கூடிய கலப்புத் தேர்தல் முறைமை நாட்டுக்கு மிகவும் அவசியம்."**

**- இவ்வாறு தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் மக்கள் ஐக்கிய முன்னணி வலியுறுத்தியது.**

தற்போது நடைமுறையில் காணப்படுவது போன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225ஆக இருக்க வேண்டும் என்றும், இதில் 140 பேர் தொகுதிவாரி முறைமையின் அடிப்படையிலும், 70 பேர் மாவட்ட அடிப்படையிலும், எஞ்சிய 15 பேர் தேசியப் பட்டியலின் ஊடாகவும் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும் அக்கட்சியின் உபசெயலாளர் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி விசேட குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

முழு நாடும் ஒரு தொகுதியாகக் கருதி நடத்தப்படும் தற்போது நடைமுறையில் உள்ள ஜனாதிபதித் தேர்தல் முறைமை அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது தொடர்பில் புதிய திருத்தங்களின்போது ஆராயப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேவை ஏற்பட்டால் இடைத் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியது.

அத்துடன் அரசியல் ஆட்சி அதிகாரம் அழுத்தங்கள் இன்றி, தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய காலம் மற்றும் திகதி சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் உதவிச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்த்தன இந்தக் குழு முன்னிலையில் தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களால் வேட்பாளர்களின் சமத்துவத்துக்குத் தீங்கிழைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களைத் தடுப்பதற்குச் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிய தேர்தல் திருத்தத்தின் ஊடாக சகல இனக் குழுக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என விசேட குழு முன்னிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டியது. உறுப்பினர்களைத் தேர்வு செய்யும்போது அடிப்படைக் கொள்கையாக 65 வீதம் தொகுதிவாரி முறையும், 35 வீதம் விகிதாசார முறையும் அமைய வேண்டும் என அக்கட்சி குழு முன்னிலையில் தெரிவித்தது.

பிரதானமாக தொகுதிவாரி முறை நாட்டுக்கு அவசியமானது என தேசவிமுக்தி மக்கள் கட்சியின் பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் தெரிவித்தது.

புதிய திருத்தங்களின் ஊடாக சகல கட்சிகளின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அக்கட்சி சுட்டிக்காட்டியது. பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் பொதுவான முறையின் கீழ் நடத்தப்படுவதன் அவசியத்தையும் அக்கட்சி வலியுறுத்தியது.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால.டி.சில்வா, டக்ளஸ் தேவானந்தா, பவித்திரா வன்னியாராச்சி, அலி சப்ரி ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், மதுர விதானகே, சாகர காரியவசம் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (இ)

---

# மரண அறிவித்தல்



## சிவசம்பு தனபாலசிங்கம்

*(கரவெட்டி - கிளிநொச்சி)*

*(முன்னாள் ஓட்டுத் தொழிற்சாலை, ஒட்டுசுட்டான், பணியாளர்- கெயர் சர்வதேசம், கிளிநொச்சி)*

**மலர்வு 01 - 12 -1950**

**உதிர்வு 05 - 09 - 2021**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி எள்ளுக்காடு சக்திபுரம், உருத்திரபுரம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு தனபாலசிங்கம் அவர்கள் 05.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிவசம்பு – பார்வதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், சாரதாமணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யுவராசா(யுவா), சுபாஜினி (தாரணி– பிரான்ஸ்), யுவரூபன் (ரூபன்– பிரான்ஸ்), சுபாகரன்(கரன்– உருத்திரபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரி (உருத்திரபுரம்), ஜீவானந்தன் (பிரான்ஸ்), கேஷினி(பிரான்ஸ்), ஜென்சி(உருத்திரபுரம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யதுஷன் (பிரான்ஸ்), தனுஷன், டினுசா, திலக்சா, கிருசிகன் (தருண்– உருத்திரபுரம்), அர்ஜீனா, அஜய், அகில், அஸ்விந், அஸ்மிதா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (07.09.2021) செவ்வாய்க்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பி.ப 03:00 மணியளவில் உருத்திரபுரம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

*தொடர்புகளுக்கு :*
**சுபாஜினி(தாரணி) - மகள்) - 0033753337413**
**யுவரூபன் (ரூபன் - மகன்) - 0033781581076**
**சுபாகரன்(கரன் - மகன்) - 0766541362**
**யதுஷன்(யது - பேரன்) - 0033753851753**

---

# மக்களின் எதிர்ப்புகளை கட்டுப்படுத்தவும் ஒடுக்கவுமே அவசரகால சட்டம் பிரகடனம்

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் கடும் கண்டனம்

கொழும்பு, செப். 08

"நுகர்வோர் விடயங்களுடன் தொடர்புடைய பணிகளை சிவில் சேவை அதிகாரிகளே செய்ய வேண்டுமே ஒழிய, சிவில் சேவையுடன் தொடர்பில்லாத இராணுவத்தினர் செய்ய முடியாது. அரசு மீதான மக்களின் எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தவும், ஒடுக்கவுமே அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்படுகின்றது."

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவசரகாலச் சட்டம் தொடர்பில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டின் வரலாற்றைப் பார்க்கும்போது, அவசரகாலச் சட்டமானது கலவரம், யுத்தம் உள்ளிட்ட சந்தர்ப்பங்களிலேயே கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், முதல் தடவையாக இப்போது பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அவசரகாலச் சட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

நுகர்வோர் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் இருக்கும்போது ஏன் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்? இது நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்தவோ, பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவோ அல்ல. மக்களின் எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தவும், ஒடுக்கவுமே அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னர் நுகர்வோர் விவகாரம் தொடர்பாக இருந்த ஆணையாளர்கள் சிவில் சேவையுடன் தொடர்புடையவர்களாகவே இருந்தனர். ஆனால், இப்போது இராணுவத்தைச் சேர்ந்தவர்களையே நியமிக்கின்றனர். இராணுவத்தினருக்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. அவர்கள் யுத்தம் புரிவதையே செய்ய வேண்டும். அவர்களால் சிவில் நிர்வாக சேவையுடன் தொடர்புடைய பணிகளைச் செய்ய முடியாது. இதன்படி ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலில் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவே அவசரகால நிலை அமுலாகின்றது என்று கூறியுள்ளார். இதன் மூலம் பொருட்களின் விலைகளை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

ஏற்கனவே சீனிக்கான வரியைக் குறைக்கவும், விலையைக் குறைக்கவும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டபோதும், அதன் நன்மைகள் மக்களுக்குக் கிடைக்கவில்லை. நாங்கள் 95 ரூபாய்க்கு வழங்கிய சீனி இப்போது 225 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. 25 வீத வரியை வழங்கியிருந்தனர். 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வருமானம் நாட்டுக்கு இல்லாது போயுள்ளது. சீனி வரி மோசடியை நிறுத்துமாறு கேட்கின்றோம். நாட்டுக்கு நூறு ரூபாவுக்கும் குறைந்த விலைக்கே சீனியைக் கொள்வனவு செய்ய முடியும். ஆனால், சதொசவில் 130 ரூபாய்க்குச் சீனி வழங்கப்படுகின்றது. மற்றைய இடங்களில் 200 ரூபாய்க்கும் மேல் சீனி விற்கப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையில் அவசரகாலச் சட்டமானது விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அன்றி மக்களின் எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தவே முன்னெடுக்கப்படுகின்றது. கொரோனா முடிவடைந்த பின்னர் வரும் எதிர்ப்பு அலைகளைக் கட்டுப்படுத்த முடியாது போகும் என்பதால் அதற்கு முன்னாயத்தமாகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் நிர்வாக சேவையில் அதிகாரிகள் யாரும் இல்லையா? தற்போது நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல், மாவட்ட செயலாளர்களுக்கு உத்தரவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏன் ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரிகள் யாரும் நாட்டில் இல்லையா? என்று கேட்கின்றோம்.

சீனி, அரிசி போன்றவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் எதற்கு அரசு என்று கேட்கின்றோம். இதனால் இந்தச் சட்டமானது மக்களுக்கு எதிராகவே கொண்டு வரப்படுகின்றது. இதற்கு நாங்கள் எதிர்ப்பை வெளியிடுவோம்" - என்றார். (இ)

## பொருளாதார...

பசில் ராஜபக்ஷ, நீண்டகால பொருளாதார வேலைத்திட்டங்கள் மற்றும் கொரோனா காரணமாக இந்த ஆண்டில் மாத்திரம் 150 இலட்சம் கோடி ரூபாய் முதல் 160 இலட்சம் கோடி ரூபாய் வரை குறைவாகவே வருமானம் கிடைத்துள்ளதாகவும் கூறினார்

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை முன்வைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "முழு உலகமும் எதிர்கொண்டுள்ள கொரோனா பெருந்தொற்றால் இலங்கை மக்களும் எமது பொருளாதாரம் அதனால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அந்நிய செலாவணி தொடர்பில் பாரிய நெருக்கடிக்கும் எமது நாடு முகங்கொடுத்துள்ளது. அதேபோன்று தேசிய ரீதியிலான நிதி நெருக்கடிகளுக்கும் திறைசேரி முகங்கொடுத்துள்ளது. இந்த மூன்று காரணிகளே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பிரதான நெருக்கடிகளாகவும் . அதற்கான தீர்வை தேட முழு அரசாங்கமும் ஒத்துழைப்புடன் செயல்படுவதுடன், எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் நடந்துக்கொள்ள வேண்டும்.

இத்தகைய நெருக்கடியான சூழலில் தனியாக இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணவும் அரசியல் இலாபங்களை தேடவும் நாம் முற்படவில்லை. எதிர்க்கட்சிகள்மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தவும் தயாரில்லை. இவ்வாறான கடினமான நேரத்தில் தனியாகப் பிரச்னைகளை தீர்க்க முடியாது, அது முடியாத காரியம் என்பது எமக்கு தெரியும்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி கொரோனா தொற்று பரவலினால் மட்டும் ஏற்பட்ட நெருக்கடிகள் மட்டுமல்ல. கடந்த காலங்களில் கையாளப்பட்ட பொருளாதார செயல்பாடுகள் காரணமாகவும் ஏற்பட்ட நெருக்கடியாகும். நாட்டின் வருமானத்தை விடவும் செலவுகள் அதிகரித்துள்ளன. கடந்த ஓரிரு வருடங்களில் இருந்தல்லாது ஓரிரு தசாப்தங்களுக்கு முன்பிருந்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு கிடைக்கும் வருமானம், அரசுக்கு கிடைக்கும் வருமானம் என்பனவற்றை நாட்டின் செலவுடன் ஒப்பிடுகையில் நாட்டின் வருமானம் மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு சில நேரங்களில் அநாவசிய செலவுகள், வீண் விரயம், ஊழல் என்பனவும் உள்ளதென்பது எமக்கு தெரியும். நீண்டகாலமாக இவை இடம்பெற்றவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனவே, உண்மையாக இந்த செலவுகளை குறைக்க எம்மால் முடிந்த நடவடிக்கைகளை எடுப்போம்.

தற்போது கொரோனா நிலைமைகள் காரணமாக எமக்குக் கிடைக்கவிருந்த வருமானமும் கிடைக்காது போயுள்ளது. கொரோனா நிலைமைகள் காரணமாக இந்த ஆண்டில் மாத்திரம் நாம் எதிர்பார்த்ததை விடவும் 150 இலட்சம் கோடி ரூபாய் முதல் 160 இலட்சம் கோடி ரூபாய் வரை குறைவாகவே கிடைத்துள்ளது.

முன்னாள் பிரதமர் இங்கு கொரோனா தடுப்பூசிகளுக்கான செலவு தொடர்பில் கேள்வி எழுப்பினார். எமக்கு கிடைக்கப்பெற்ற கொரோனா தடுப்பூசிகளில் 80 வீதமானவற்றை நாம் பணம் கொடுத்தே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இப்போதும் அதற்கான பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் வழமையை விடவும் இரு மடங்கினால் ஒட்சிசன் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதற்காகவும் பெரும் தொகை செலவாகியுள்ளது. அதேபோல் நாடு முடக்கப்பட்டபோதும் அரச ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளை நாம் குறைக்கவில்லை. சுகாதார துறையினருக்கு மேலதிக கொடுப்பனவுகளை கொடுக்க வேண்டியுள்ளது. எனவே சகல துறையிலும் செலவு கூடியுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் அந்நிய செலாவணி தொடர்பில் ஒரு நல்ல நிலையை எட்ட முடியும். கடன் மற்றும் நன்கொடைகளை பொறுத்தவரையில், நன்கொடைகள் குறைவடைந்துள்ளன. எனவே சர்வதேச கடன்களை பொறுத்தவரை அவசியமான தேவைகள் தவிர்ந்த ஏனைய கடன்களை தவிர்த்துக் கொள்ளவே நடவடிக்களை எடுத்து வருகின்றோம். இதற்கு முன்னர் நாம் பெற்ற கடன்களை நாம் செலுத்தியாக வேண்டும். அவற்றை நாம் சரியாக கையாண்டு வருகின்றோம். கடன் தவணையை நீடிக்கும் முயற்சிகளை கைவிட்டு முறையாகக் கடன்களை செலுத்தி கடன் நெருக்கடியில் இருந்து விடுபடவே முயற்சிக்கின்றோம். நாட்டின் சுயாதீனத்திற்கும் இறைமைக்கும் பாதிப்பு ஏற்படாத மற்றும் அரசியல் உடன்படிக்கைகள் இல்லாத விதத்தில் கடன் கொள்கைகளை கையாண்டு வருகின்றோம். இந்த ஆண்டில் கடன் நெருக்கடிகள் குறையாது போனாலும் அடுத்த ஆண்டில் இவை குறையும் என நம்புகின்றோம் -என்றார்.

## மன்னார் எரிவாயு...

மேற்கொள்ளும் முதலீட்டாளர் களுக்கு 50 வீதத்தை வழங்கினாலும் 13 ஆயிரத்து 350 கோடி டொலர் அரசுக்கு கிடைக்கும் எனவும், அது நாட்டின் மொத்த கடன் தொகையான 4 ஆயிரத்து 700 கோடி டொலரை விட மூன்று மடங்காகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் இரண்டாம் மதிப்பீட்டுக்காக முன்வைக்கப்படவுள்ள கனியவளங்கள் சட்டமூலம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் அமைச்சர் இதனை குறிப்பிட்டதுடன் இந்த சட்ட மூலத்துக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அனுமதியும் வழங்கப்பட்டது.

இலங்கை கனிய வளங்கள் அதிகார சபையை ஸ்தாபித்தல் உள்ளிட்ட கனிய வளங்கள் ஆய்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் அந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்தும் நோக்கிலான இந்த சட்ட மூலத்தை அரசின் முக்கிய விடயமொன்றாக கருதி பாராளுமன்றத்துக்கு முன்வைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மன்னார் கடற்பரப்பிலுள்ள எரிவாயுவினால் மாத்திரம் நுரைச்சோலை மின் சக்தி நிலையத்தை 120 வருடங்களுக்கு செயல்படுத்த முடியும் எனவும், அங்கு காணப்படும் எண்ணெயின் மூலம் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை 143 வருடங்களுக்கு செயல்படுத்த முடியும் எனவும் அமைச்சர் கம்மன்பில இதன்போது குறிப்பிட்டார்.

## கொரோனா...

இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 504 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 184 பேரில் 87 பெண்களும், 97 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## வட, கிழக்கில்...

இதனால் வடக்கு, கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அதிகளவில் தேங்கிக் கிடக்கின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மாத்திரமே எரிவாயு மின்தகன மேடைகள் உள்ளன. மட்டக்களப்பில் இல்லை. எனவே நிதி அமைச்சர் அவசரமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு தற்காலிகமாக வேனும் எரிவாயு மின்தகனமேடைகளை வடக்கு,கிழக்கில் அமைத்து கொரோன வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## நிதி சட்டமூலம்...

வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

நிதி சட்டமூல விவாதத்தின் இறுதியில் இந்த சட்டமூலம் கறுப்பு பணத்தை வெள்ளையாக்கவே கொண்டு வரப்படுவதால் இதனை நாம் அங்கீகரிக்க மாட்டோம். கடுமையாக எதிர்க்கின்றோம் எனவே வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கூறியதையடுத்து இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் நிதி சட்ட மூலத்துக்கு ஆதரவாக அரச தரப்பினர் வாக்களித்த அதே வேளை எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜே .வி.பி.தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பன எதிராக வாக்களித்தன. ஐக்கிய தேசியக்கட்சி ,தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியவை வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான விவாதத்தின் முடிவில் சட்டமூலம் தொடர்பான வாக்களிப்பிலிருந்து தாம் விலகியிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## நாளாந்த...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 71 ஆயிரத்து 859 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,769 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 88 ஆயிரத்து 278 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## சிங்களவரின்...

இடம்பெற்ற 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எந்தத் தேவையும் இன்றி அவசரகால சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த பேரினவாத காலனித்துவ ஆதிக்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலும், ஆயுத ரீதியிலும் போராடும் போது அதனை ஒடுக்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் 30 ஆண்டுகளாக தமிழர்களை வேட்டையாடியது.

எங்களின் பெண்களை சித்திரவதை செய்வதற்கும், எங்களின் இளைஞர்களை கேட்பாரின்றி கொலை செய்வதற்கும் எங்களது தேசத்தின் செல்வங்களை கொள்ளையடித்து தென்னிலங்கைக்கு கொண்டு வரவும் அந்த அவசரகால சட்டத்தை கொண்டு வந்தீர்கள். ஆனால், இன்று சிங்கள மக்களிடமிருந்து வரும் எதிர்ப்பை சமாளிப்பதற்காக இந்த அவசரகால சட்டத்தை கொண்டு வந்துள்ளீர்கள். இந்தப் போக்கு உங்களை அதல பாதாளத்திற்கு கொண்டு செல்லும் -என்றார்.

## தமிழ் அரசு...

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் மரபுவழி தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற விடயங்களுடன் தமிழர் தரப்பின் நிலைப்பாடு தொடர்பில் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஆவணம் நேற்றிரவு மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையாருக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் அல்லது இன்று அனுப்பப்படலாம் என்று தெரிய வருகின்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர்களான சி. சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த. கலையரசன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன், பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் நடராசா, மட்டக்களப்பு மாநாகர முதல்வர் தி. சரவணபவன் ஆகியோரே இந்த ஆவணத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

தமிழர் தரப்பின் சார்பில் ஜெனிவாவுக்கு இவ்வாறான ஆவணம் ஒன்றை அனுப்புவதற்கு தாம் கையொப்பமிட்டார் என்பதை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் 'ஈழநாடு' வுக்கு உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மட்டும் கையொப்பமிட்டு ஏற்கனவே ஒர் ஆவணம் அனுப்பப்பட்டது. அந்த ஆவணத்தில், விடுதலைப் புலிகளும் மனித உரிமைகள் மீறல், போர் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று ஐ.நா. செயலாளர் பான் கீ மூனின் அறிக்கையில் கூறப்பட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. இந்த உள்ளடக்கம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையிலேயே இப்போது தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர்கள் தனியாக ஆவணம் ஒன்றை அனுப்பவுள்ளனர். (ஐ-3)

## அவசரகால...

றனர் என்று ஐக்கிய மக்கள்சக்தி எம்.பி. யான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விவாதம் ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், "சட்டவிரோதமாக சம்பாதித்த பணம், வரி செலுத்தப்படாது வைத்திருந்த கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் செயல்பாடே இந்த சட்டமூலத்தின் ஊடாக நடக்கவுள்ளது. வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள பணத்தை அங்கேயே முதலீடு செய்து அந்த பணத்தை இங்கு சட்ட அந்தஸ்தை பெற்றுக்கொள்ளலாம்.

இங்கு சட்டப்படி வணிகம் செய்து முறையாக நடப்பவர்களுக்கு இது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் நிலைமை ஏற்படலாம். இங்கு இப்படி செய்கையில் பாகிஸ்தானில் இதுபோன்று சட்டவிரோத பணத்தை வைத்திருப்பவர்களை சிறையில் அடைக்கின்றனர். அப்படி இங்கு செய்தால் அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கைகொள்ள முடியும்.

இதேவேளை அவசரகால சட்டம் தொடர்பில் கூறுவதானால் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கை பேணுவதற்கே அவசரகால சட்டம் இதுவரையில் கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்போது அரிசி, சீனி அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்மூலமே அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க முடியுமென்று கூறுகின்றனர். இதனை நம்ப முடியாது.

நுகர்வோர் சட்டங்கள் இருக்கும் போது, அவசரகால சட்டம் அவசியமற்றது. இந்த விடயத்திற்கு அவசரகால சட்டத்தை கொண்டு வருகின்றீர்கள் என்றால் யுத்தம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று தெரியவில்லை. அப்போது பெரிய புதிய சட்டங்களை கொண்டுவருவதற்கு தேடி அலைய வேண்டி வரலாம் - என்றார்.

ஈழநாடு
Eelanadu




# ஆணை வழங்கிய மக்களை அச்சுறுத்தி தமது தேவைகளை நிறைவேற்ற அரசு கடும் முயற்சி



## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, செப். 08**

**"மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்ட அரசு, தற்போது மக்களை அச்சுறுத்தி தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயல்வதையே காணக்கூடியதாக வுள்ளது."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் குற்றஞ்சாட்டினார்.**

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அவசரகாலச் சட்டம் எதற்கு என்ற கேள்வி எமக்கு எழுந்துள்ளது.

கொரோனா என்பது தொற்று நோயாகும். அதற்கென எமது நாட்டில் வேறாக சட்டம் உள்ளது. அந்தச் சட்டங்களுக்கு அமைய செய்பட முடியும். அதேபோல் பொருள் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் அவரகாலச் சட்டத்துக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. அவற்றுக்கும் சட்டங்கள் உள்ளன.

அரிசி, பருப்பு சீனி என்பவற்றின் விலையைக் கட்டுப்படுத்த நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் உள்ளது. ஆனால், பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தி அதற்கென ஒழுங்கு விதிகள் சிலவற்றை அமுல்படுத்தியுள்ளார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் மக்களைத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவா? அல்லது பொருள் விலையைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனரா? அல்லது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசு தமது தேவைகளைப் பூர்த்தியாக்கிக்கொள்ள முயல்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. பாரிய மக்கள் ஆணையை தருமாறு இந்த அரசு கூறியது.

நாட்டு மக்களுக்கான சலுகைகளை வழங்குவதற்காகவே மக்கள் ஆணையை அரசு கேட்டனர். அதனை மக்களும் அவர்களுக்கு வழங்கினர். ஆனால், மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்ட அரசு, தற்போது மக்களை அச்சுறுத்தி தமது தேவைகைள நிறைவேற்றிக்கொள்வதற்கு முயல்வதையே காணக்கூடியதாகவுள்ளது" - என்றார். (இ)

# சமூக நீதியை மீறுகின்றது அரசு

## எதிர்க்கட்சி தலைவர்குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 08

அரசு சமூக நீதியை மீறிச் செயல்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

"நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, கறுப்புப் பணத்தை சுத்தம் செய்வதில் அரசு ஈடுபட்டுள்ளது. அதன்மூலம் மோசடி செய்பவர்கள் தங்கள் கறுப்புப் பணத்தைப் பரிமாற்றம் செய்ய முடியும்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொளிப் பதிவிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாராவது வரி செலுத்தாமல் பதுக்கி வைத்திருந்தால், அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அவற்றுக்குப் போதுமான ஏற்பாடுகள் உள்ளன. அதற்குப் பதிலாக, மோசடி செய்பவர்கள் மற்றும் சில பணக்கார குபேரர்களுக்கு அரசு வரிச்சலுகைகளை வழங்க முயற்சிக்கின்றது.

நாட்டில் முதலாளித்துவத்தை அனுமதிப்பதன் மூலம் அரசு சமூக நீதியை மீறமுயற்சிக்கின்றது.

இதன் ஊடாக சொத்தைக் குவிப்பில் ஈடுபடுவோர், வரி செலுத்தாது மோசடி செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கையே இடம்பெறுகின்றது.

ஆகவே, அரசின் இந்த நடவடிக்கையைக் கடுமையாக எதிர்க்கின்றோம்" - என்றார். (இ)

# மனைவியை கொலைசெய்த கணவர் 19 வருடங்களின் பின்னர் சிக்கினார்!

பண்டாரவளை, செப். 08

பெண்ணொருவரைக் கொலை செய்துவிட்டு தலைமறைவாகியிருந்த நபரொருவரை, 19 வருடங்களின் பின்னர் பண்டாரவளைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது பெண்ணொருவர், அவரது கணவரால் கடந்த 2002ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பில் அவரது கணவரைப் பொலிஸார் கைதுசெய்ததுடன் பதுளை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை பதுளை நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், சந்தேக நபர் வழக்கு விசாரணைகளுக்கு முன்னிலையாகாது தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், கடந்த 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி அவருக்கு எதிரான குற்றம் நிருபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் பிடியாணை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

குறித்த நபர் கட்டார் மற்றும் சவுதி ஆகிய நாடுகளில் பணியாற்றிவந்துள்ளார். அதுமட்டுமன்றி சட்டத்துக்கு முரணான வகையில் மூன்று பெண்களை அவர் திருமணம் முடித்துள்ளார் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கேகாலை நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபர் இராணுவப் படைப்பிரிவில் பணியாற்றி வந்த நிலையில் இராணுவத்திலிருந்தும் தப்பிச்சென்றுள்ளார். சந்தேகநபருக்கு தற்போது 49 வயது என்ற போதிலும் ஐந்து வயதை குறைத்துக் காட்டும் வகையில் போலியான அடையாள அட்டையை அவர் தன்வசம் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)






# மரண அறிவித்தல்



**பிறப்பு**
**13 - 10 - 1944**

**இறப்பு**
**05 - 09 - 2021**

## வேலுப்பிள்ளை நாகராஜா

வண்ணார்பண்ணை ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாக வும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராஜா அவர்கள் கடந்த (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா Scarborough வில் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு – சிவயோகம் தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் ஆருயிர்க் கணவரும், கோகிலவாணி, சர்வனந்தினி, திலிப்குமார், தயாளினி, அஜித்குமார், ராஜீவ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேஸ்வரன், வசந்தபாலன், வாசுகி, பவானந்தன், நிருஷா, லாவண்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், இராசநாயகம், அகிலாண்டேஸ்வரி மற்றும் சோமசுந்தரம், லோகேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராஜேந்திரன், இராஜமலர் மற்றும் பத்மதேவி, சிவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் குணவதி, பேரானந்தம், காலஞ்சென்ற இரத்தினவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஜனகன், தாமிரா, பானுஜன், சமீனா, அக்ஷயா, அபினா, ஆரன், அர்வின், ஆதவ், சங்கரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 08 Sep 2021 6:00 PM - 9:00 PM
Thursday, 09 Sep 2021 5:30 PM - 6:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1,
Canada.

கிரியை
Thursday, 09 Sep 2021 6:00 PM - 7:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1,
Canada.

தகனம்
Thursday, 09 Sep 2021 8:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
திலிப்குமார் – மகன்
Mobile : +16473385652

தகவல்
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் வியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்-எனை உரசும் காற்றே



6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-தவசீலன் பொருளியல் ஆய்வாளர்
9.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓ டிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு